Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரெண்டு

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(சி-976)
(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 21 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 5 (06.07.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 277

# கரும்புலிகள் நாள் நிகழ்வில் தேசியத் தலைவர் பிரபாகரன்!

## பாசறையில் ஈகச்சுடரேற்றினார்

கரும்புலிகள் நாளையொட்டி, நேற்று புலிகளின் பாசறையொன்றில் நடைபெற்ற நிகழ்வில், வீரச்சாவடைந்த கரும்புலிகளின் உருவப்படங்களுக்கு, தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் மலரஞ்சலி செலுத்தினார்.

மேற்படி நிகழ்வுக்கு முன்னதாக, நேற்றிரவு 7.05 மணியளவில், தலைவர் வே.பிரபாகரன - கரும்புலிகள் நினைவாலயத்தில் ஈகச்சுடரை ஏற்றிவைத்து, வீரச்சாவடைந்த கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தினார்.

மேற்படி அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து 'கரும்புலிகள் - பாகம் 6' ஒலிப்பேழை வெளியிட்டு வைக்கப்பட்டது.

கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, ஒலிப்பேழையை வெளியிட்டுவைக்க, முதல் பேழையை தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் பெற்றுக்கொண்டார்.

மேற்படி நிகழ்வில், புலிகளின் மூத்த தளபதிகள், துறைசார் பொறுப்பாளர்கள் மற்றும் போராளிகள் பலரும் கலந்துகொண்டனர்.



ஈகச்சுடரேற்றும் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன்



கரும்புலிகள் நினைவாலயத்தில், அஞ்சலி செலுத்தும் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனும் போராளிகளும்.



ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் கரும்புலி லெப்.கேணல் போர்க்கின் நினைவுக் கல்லுக்கு, வவுனியா அரசிற்துறை பொறுப்பாளர் எழிலன் மலரஞ்சலி செலுத்துகிறார்.



நெல்லியடியில் இடம்பெற்ற நிகழ்வில், கரும்புலிகளின் பொதுப்படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகிறது.



மட்டக்களப்பில், கரும்புலிகள் நாள் நிகழ்வில் அஞ்சலி செலுத்தும் தளபதிகளும், பொறுப்பாளர்களும்.

# உணர்வெழுச்சியுடன் நடந்த கரும்புலி நாள் நிகழ்வுகள்!

## தமிழர் தாயகமெங்கிலும் அனுஷ்டிப்பு!

(யாழ்ப்பாணம்)

**தேச விடுதலைக்காக தம் இன்னுயிர்களைத் தியாகம் செய்த கரும்புலி வீரர்களை நினைவுகூரும் வகையில், நேற்று தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டன. பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்ற கரும்புலிகள் நாள் நிகழ்வுகளில், பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றினர்.**

கரும்புலிகள் நாள் விசேட நிகழ்வுகளாக - அனைத்து மாவட்டங்களிலும் நினைவுக் கூட்டங்களும், ஊர்திப் பவனிகளும் மிகவும் எழுச்சிபூர்வமாக நடைபெற்றன.

யாழ். மாவட்டத்தில், நினைவுக் கூட்டங்கள், கோட்ட மட்டத்தில் நடைபெற்றன. ஏனைய பகுதிகளில் மாவட்ட மட்டத்திலான நிகழ்வுகள் இடம்பெற்றன.

தாயக விடுதலைப் போராட்ட வரலாற்றில், முதலாவது கரும்புலித் தாக்குதல் இடம்பெற்ற நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் உணர்வுபூர்வமான முறையில் கரும்புலிகள் நாள் நிகழ்வு இடம்பெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாக திட்டவரைபுடன்
## நோர்வேத் தூதுவர் வெஸ்பேர்க் இவ்வாரம் வன்னிக்கு விஜயம்!

நோர்வே விசேட தூதுவர் ஜோன் வெஸ்பேர்க், அரசின் இடைக்கால நிர்வாக திட்டவரைபுடன் எதிர்வரும் புதன்கிழமை வன்னிக்குச் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது வெளிநாட்டிலிருக்கும் அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸும், மிலிந்த மொறகொடவும் கொழும்பு திரும்பிய பின்னரே, இந்தத் திட்டவரைபுக்கு இறுதிவடிவம் கொடுக்கப்படும் எனத் தெரியவருகிறது.

வன்னியில் - விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. திட்டவரைபு குறித்து, தமிழ்ச்செல்வன் புலிகளின் தலைமையுடன் கலந்தாலோசனை நடத்திய பின்னர் - தலைமையின் நிலைப்பாடு குறித்து அரசியல் ஆலோசகர்(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரு பொலிஸாரும் புலிகளால் விடுவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில், கடந்த 10 ஆம் திகதி முதல் தமிழீழ விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு பொலிஸாரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்

மட்டக்களப்பு, பதுளை - செங்கலடி வீதி, கறுத்தப்பாலம் இராணுவ சோதனை நிலையத்தில் வைத்து இவர்கள் இருவரும் விடுவிக்கப்பட்டனர். விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறைப் பிராந்திய மகளிர் படையணித் தளபதி நிலா வினி மற்றும் மட்டு - அம்பாறை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாக அமைப்பு தமிழ்ப் பகுதிகளுக்குத் தேவை!

## மனச்சாட்சிப்படி கூறுவதாக பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

"மனச்சாட்சியின்படி நான் கூறுகின்றேன், வடக்கு - கிழக்குப் பகுதியில் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படவேண்டும். இந்த இந்த இடைக்கால நிர்வாகத்தை, விடுதலைப் புலிகளிடம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் அவர்களை மீண்டும் சமாதானப் பேச்சுக்களுக்கு அழைத்துவர முடியும் என்று அரசு நம்புகிறது." - இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டியவில், நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் பேசியபோதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது -

யுத்த நிறுத்தத்தைக் கைவிட்டு, மீண்டும் (12 ஆம் பக்கம் பார்க்க)



# வடமராட்சி தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(ஆழியவளை)

வடமராட்சி கல்வி வலயத்தில் நடைபெற்ற - தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வெளியாகியிருக்கின்றன. இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு -

**பேச்சு**

**பிரிவு - 1**

த.பிரியந்தி (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), தி.றஜிதா (வட. இந்து மகளிர் கல்லூரி), யோ. தபீத்தா (புற்றளை ம.வி),

**பிரிவு - 2**

சாயிஜெனனி (வடமராட்சி ம.ம. கல்லூரி), சி.கஸ்தூரி (மெதடிஸ்த பெ.உ.கல்லூரி), ம.காயத்திரி (வட. இந்து மகளிர் கல்லூரி).

**பிரிவு - 3**

ச.கார்த்திகா (மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), த.இளங்கோ (உடுத்துறை ம.வி), த.றஜிதா (வடமராட்சி ம.ம.கல்லூரி)

**பிரிவு - 4**

சி.கஜேந்தினி (வட. இந்து மகளிர் கல்லூரி), த.விஜிதா (வடமராட்சி ம.ம.கல்லூரி), பு.சுரேந்தர் (ஹாட்லிக் கல்லூரி).

**பிரிவு - 5**

அ.தர்சன் (ஹாட்லிக்கல்லூரி), அ.பிருந்தா (வட.இந்து மகளிர் கல்லூரி), ரா.அரவிந்தன் (நெல்லியடி ம.ம.வி).

**கட்டுரை**

**பிரிவு - 2**

த.அரண்யா (நெல்லியடி ம.ம.வி), ஐ.யோகல்யா (மெதடிஸ்த பெ.உ. பாடசாலை), ச.விதுரன் (ஹாட்லிக் கல்லூரி).

**பிரிவு - 3**

இ.பவித்திரா (புற்றளை ம.வி), செ.பாமினி (வல்வெட்டி இ.த.க. பாடசாலை), த.அனுஸ்கா (மெதடிஸ்த பெ.உ. பாடசாலை).

**பிரிவு - 4**

சி.இலக்கியா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), அ.யசிந்தா (வட. இந்து மகளிர் கல்லூரி), ப.சுரேகா (தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்).

**பிரிவு - 5**

க.யசோ (விக்கினேஸ்வராக் கல்லூரி), ப.அகல்யா (வல்வை மகளிர் ம.வி.), நா.சுபோதினி (தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.).

**பாவோதல்**

**பிரிவு - 1**

பு.ஆரணி (தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்), ம.உசாந்தி (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), சி.தேவகி (துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாடசாலை).

**பிரிவு - 2**

க.சோபிகா (மெதடிஸ்த பெண்கள் உ. பாடசாலை), ஜெ.ரம்பா (தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.), அ.றெஜீத்தா (திரு இருதயக் கல்லூரி, கரவெட்டி).

**பிரிவு - 3**

இ.நிதர்சன் (ஹாட்லிக் கல்லூரி), ப.ரசானி (வல்வெட்டி இ.த.க.பாடசாலை), பா.தர்மினி (வட. இந்து மகளிர் கல்லூரி)

**பிரிவு - 4**

ச.கேதீஸ்வரி (தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்), சோ.கிருஷ்ணப்பிரியா (இமையாணன் அ.த்.க. பாடசாலை), ப.சிறீஸ்கலா (தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.)

**பிரிவு - 5**

ப.யோகாம்பிகை (வல்வெட்டி (சிதம்பராக் கல்லூரி), ச.சுகன்யா (மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), இ.உமா (வட. இந்து மகளிர் கல்லூரி)

**வாசிப்பு**

**பிரிவு - 1**

ப.கௌதமன் (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), க.விதுஜா (புற்றளை ம.வி), ஜெ.சுகன்யா (வல்வை சிவகுரு வித்தியாலயம்).

**பிரிவு - 2**

பொ.அபித்தா (வடமராட்சி ம.ம. கல்லூரி), டெ.றெஜிதா (திரு இருதயக் கல்லூரி), ஜெ.தமிழ்நிலா (கரணவாய் பொன்னம்பலம் ம.வி.).

**ஆக்கத்திறன் (எழுத்து)**

**பிரிவு-1**

உ.விதுஷா (தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம்), கே.கிருத்திகா (நெல்லியடி மெதடிஸ்த மி.த.க. பாடசாலை), சு.சுகன்யா (புற்றளை ம.வி.).

**ஆக்கத்திறன் (கதைகூறல்)**

**பிரிவு-1**

பு.நிலக்சி (திரு இருதயக்கல்லூரி), ம.மிதுஷா (புற்றளை ம.வி), ந.டினாளன் (மாணிக்கவாசகர் வித்தியாலயம்)

**இசையும் அசைவும்**

**பிரிவு-1**

செ.நர்த்தனா (கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை), பா.சர்மிளா (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), க.தேனுகா (திரு இருதயக்கல்லூரி).

**இசை (தனி)**

**பிரிவு -2**

ந.கோகிலவாணி (வட. இந்து மகளிர்கல்லூரி), சு.அரவிந் (நெல்லியடி ம.ம.வித்தியாலயம்), சி.மெக்சி பாரதா (மெதடிஸ்த பெ.உ.பாடசாலை)

**பாவோதல்**

**பிரிவு - 3**

ச.ஜான்சி (சென். தோமஸ் பெ. பாடசாலை), சா.மதுசூதனா (வட. இந்து மகளிர் கல்லூரி), ம.சர்மினி (உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி)

**பிரிவு - 4**

ச.கணேஸ்குமார் (உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), த.திருவாழ்மார்பன் (புற்றளை ம.வித்தியாலயம்), யோ. யோகினி (மெதடிஸ்த பெண்கள் கல்லூரி)

**பிரிவு - 4**

சி.பிரபாலினி (தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.), த.தனதேனுகா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), சோ.சிந்துஷா (வட.இந்து மகளிர் கல்லூரி).

**கவிதை ஆக்கம்**

**பிரிவு - 4**

கி.அபிலோஜினி (வடமராட்சி ம.ம.கல்லூரி), சா.சாந்தி (வல்வை மகளிர் கல்லூரி), ந.கார்த்திக் (ஹாட்லிக் கல்லூரி).

**பிரிவு - 5**

சோ.ஜெகஜனனி (நெல்லியடி ம.ம.வி.), வை.வசிகரன் (விக்கினேஸ்வராக் கல்லூரி), பு.சுஜிதா (வட. இந்து மகளிர் கல்லூரி)

**சிறுகதை ஆக்கம்**

**பிரிவு - 4**

து.நிதர்சா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இ.கார்த்திகா (அம்பன் அ.மி.த.க. பாடசாலை), தே.அஜிதா (இமையாணன் அ.த.க.பாடசாலை).

**பிரிவு - 5**

ஆ.அஜந்தி (உடுப்பிட்டி அ.மி.த.க. பாடசாலை), கை.சிந்துஜா (ஞானாசாரியர் கல்லூரி), செ.தர்சிகா (தேவரையாளி இந்துக் கல்லூரி).

**நடனம் தனிநிகழ்ச்சி**

**பிரிவு - 1**

வி.அபிராமி (தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம்), த.அன்சுகா (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), அ.ஜீவிதா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**பிரிவு - 2**

பா.ரோகினி (வட.இந்து மகளிர் கல்லூரி), ப.நிஷானி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), நா.சுவிதனா (நெல்லியடி ம.ம.வி.)

**பிரிவு - 3**

இ.வரலட்சுமி (வடமராட்சி ம.ம. கல்லூரி), வை.துவாரகா (வட.இந்து மகளிர் கல்லூரி), க.பிரண்யா (மெதடிஸ்த பெண்கள் கல்லூரி)

**பிரிவு - 4**

இ.கார்த்திகா (வட.இந்து மகளிர் கல்லூரி), பா.கஜந்தா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), அ.பிருந்தா (மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), வ.சௌமியா (தேவரையாளி இந்துக் கல்லூரி).

**பிரிவு - 5**

யோ.ஜெயதாரணி (வடமராட்சி ம.ம.கல்லூரி), அ.அனுஜா (உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி), ச.மைதிலி (நெல்லியடி ம.ம.வி.).

**இசை - குழு நிகழ்ச்சி**

**பிரிவு - 2**

வட.இந்து மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி, உடுப்பிட்டி அ.மி.கல்லூரி).

**பிரிவு - 1**

நெல்லியடி ம.ம.வி, ஹாட்லிக் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி.

**நடனம் - குழு நிகழ்ச்சி**

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, சென்.தோமஸ் பெண்கள் பாடசாலை, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

**விசேட கூத்து (சிந்துநடை)**

விக்கினேஸ்வராக் கல்லூரி, தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம், செம்பியன்பற்று அமெரிக்கன் தமிழ் கலவன் பாடசாலை.

**வில்லுப்பாட்டு**

தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி, தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம், விக்கினேஸ்வராக் கல்லூரி.

**நாடகம் (திறந்த போட்டி)**

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்.

**குறுநாடக ஆக்கம்**

சி.தர்மிளா(ஞானாசாரியார் கல்லூரி, ச.தேவகி(விக்கினேஸ்வராக் கல்லூரி).

**தமிழ் அறிவு வினாவிடைப் போட்டி**

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, வட.இந்து மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அமெ. மிஷன் கல்லூரி).

**விவாதம்**

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, நெல்லியடி ம.ம. வித்தியாலயம்

**நாட்டுக்கூத்து(இசை நாடகம்)**

பருத்தித்துறை சென்.தோமஸ் பெண்கள் பாடசாலை, தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி., உடுபபிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

**தென்மோடி**

மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை. (122)


யாழ்.மண்ணில் முழுமையான டிஜிற்றல் அலைகளில்
தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தயாரித்து
வழங்கிக்கொண்டிருக்கும் DIGITAL MEDIA NETWORK
பெருமையுடன் வழங்கும்



குட்டி மேதைகள்



நம் தேசத்துக் குட்டி மேதைகளை தாரணியெங்கும்
ஒளியலைகளில் பரவவிடும் தொலைக் காட்சித் தொடர் நிகழ்ச்சி

நிகழ்ச்சி ஆதரவு

Annai Nagaa Food City
For all your daily needs

THAMPI
Now Links With
LLIONAIR
Lanka's pride in the sky

நாடெங்கும் மேசைத் தொலைபேசி விநியோகஸ்தர்
பவர் செலுலார் ரேடிங் கம்பனி



குட்டித் தம்பி தங்கைகளே!

உங்கள் ஆற்றல் ஆளுமையை வளர்ப்பதற்காகவும், வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் உங்கள் குட்டிச் சொந்தங்கள் உங்கள் திறமைகளைப் பார்த்து இரசிப்பதற்கும், TTN தொலைக் காட்சி உங்களை அறிமுகம் செய்துவைக்கவுள்ளது. நீங்கள் பங்குபற்றி உங்கள் திறமைகளை வெளிப்படுத்த வழிசெய்யும் நிகழ்ச்சி ஒன்றை மாதம் தோறும் நாம் நிகழ்த்துகின்றோம்.

குட்டி மேதைகள் நிகழ்ச்சியில் நீங்களும் இணைந்துகொள்ள விரும்புகிறீர்களா?

நீங்கள் செய்யவேண்டியது.....

இங்கேயுள்ள விண்ணப்பத்தை நிரப்பி, உங்கள் அழகிய புகைப்படத்துடன் எங்களுக்கு அனுப்பிவையுங்கள்.

எமது முகவரி: Digital Network,
231, கோவில் வீதி,
நல்லூர்.
தொலைபேசி: 222 3919





விண்ணப்பத்தினை நிரப்பி
இம்மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு
அனுப்பிவையுங்கள்
நிகழ்ச்சித் திகதி: 12,13 ஜூலை 2003
(இடம் பின்னர் அறிவிக்கப்படும்)

முழுப்பெயர் :..............................
..............................
பால் :ஆண் ☐ பெண் ☐
பிறந்த திகதி :..............................
முகவரி :..............................
..............................
பாடசாலையின்
பெயர்:..............................
ஆர்வமுள்ள துறைகள்:..............................
..............................
..............................
..............................
கையொப்பம்

ஊடக அனுசரனை:

நமது ஈழநாடு

# சுதந்திரக்கட்சி – ஜே.வி.பி. கூட்டணி குறித்து பொ.ஐ.மு விசேட கூட்டத்தில் ஆராயப்படும்!

## டி.எம்.ஜெயரட்ன தகவல்



சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் (ஜே.வி.பி) இடையிலான கூட்டணி தொடர்பாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் விசேட கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதான அங்கத்துவக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பியுடன் கூட்டணி அமைத்துக் கொள்வது குறித்து, ஏனைய கட்சிகள் மத்தியில் கருத்து வேறுபாடு இருந்து வருகின்றது.

இந்த நிலையிலேயே, சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் கூட்டணி அமைக்க எடுத்துள்ள தீர்மானம் குறித்தும், இதுவரை ஜே.வி.பியுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் குறித்தும் பொதுஜன ஐக்கிய முன்னணிக் கட்சிகளுக்கிடையிலான கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

எதிர்வரும் பதினான்காம் திகதி நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில்- லங்கா சமசமாசக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன பங்கேற்கும் என்று, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம்.ஜெயரட்ன தெரிவித்தார்.

இதேவேளை, ஜே.வி.பியுடனான கூட்டணி குறித்துத் தகவல் வெளியிட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன-

இரு கட்சிகளின் இணைப்புத் தொடர்பான கொள்கை அறிக்கை தயாரிக்கப்பட்டுவிட்டது. அடுத்த ஒருவார காலத்துக்குள் இந்தக் கொள்கை அறிக்கை பொதுஜன ஐக்கிய முன்னணிக் கட்சிகளிடம் சமர்ப்பிக்கப்படும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி- ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு - இந்தக் கூட்டணியை அமைப்பதே தமது நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி கட்சிகளுடன் இந்தக் கூட்டணி குறித்து ஆராய்ந்தபின்னர், ஜே.வி.பியுடன் இன்னொரு சுற்றுப்பேச்சு நடத்தப்படும் என்று, சுதந்திரக்கட்சியின் செயலாளர் மைத்திரி பால சிறிசேன மேலும் தெரிவித்தார்.

# சாதாரண வங்கிக் கடனைவிட அடகுக் கடனுக்கு கூடுதல் வட்டி!

## வாடிக்கையாளர்கள் புகார்

(கொழும்பு)

அரச வங்கிகள் தங்கநகை அடகுக் கடன்களின் மூலம் பெருமளவு இலாபத்தை ஈட்டுவதாகவும், வாடிக்கையாளர்களிடமிருந்து கூடிய வட்டியை அறவிடுவதாகவும் புகார்கள் எழுந்துள்ளன.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது, சாதாரணமாக வங்கிகளில் வழங்கப்படும் கடன்களுக்கு 9.5 சதவீதத்திலிருந்து 12 வீதம்வரையே வட்டி அறவிடப்பட்டு வருகின்றது.

ஆனால், அரச வங்கிகள் பலவற்றிலும் தங்கநகை அடகுக்குப் பதினெட்டு வீத வட்டி அறவிடப்படுகின்றது. சாதாரண வங்கிக் கடனைவிட, தங்கநகை அடகுக்கடனுக்குக் கூடிய வட்டிவீதம் அறவிடப்படுவது. குறித்து வாடிக்கையாளர்கள் புகார் செய்துள்ளனர்.

இதேவேளை, அரச வங்கிகள் -. தங்கநகை அடகுக்காக 40 ஆயிரம் கோடி ரூபாவை வாடிக்கையாளர்களுக்கு வழங்கியிருப்பதாகத் தெரியவருகின்றது.

இதில் மக்கள் வங்கி 25 ஆயிரம் கோடி ரூபாவையும், இலங்கை வங்கி 13 ஆயிரம் கோடி ரூபாவையும் - தங்கநகை அடகுக்குக் கடனாக வழங்கியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

# சமாதான முயற்சிகள் குறித்து கிராமிய மட்டத்தில் பிரசாரம்!

## ஐ.தே.க. நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் ஆலோசனை

சமாதான முயற்சிகள் குறித்துக் கிராமிய மட்டத்தில் பிரசாரங்களை மேற்கொள்ளவேண்டும் என்று, ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் - நேற்று முன்தினம் எம்பிலிப்பிட்டிய மகாவலி விளையாட்டரங்க மைதானத்தில் ஆரம்பமானது.

இந்தக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த பெரும்பாலான கட்சி உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் - அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் குறித்துக் கிராம மக்களுக்குப் போதிய தகவல்கள் சென்று சேரவில்லை என்றும், இதனால் கிராமிய மட்டத்தில் இது குறித்த பிரசாரங்கள் முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

சமாதான முயற்சிகளைத் தோற்கடிக்க முனையும் சக்திகளைத் தோற்கடிப்பதற்குக் கிராமிய மட்டத்தில் சமாதான முயற்சிகள் குறித்த விழிப்புணர்வுப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

இந்த மாநாட்டில் உரையாற்றிய காணி அமைச்சர் ராஜித சேனரத்ன -

தேசிய லொத்தர் சபையைப் பொறுப்பேற்று நிர்வகிக்கமுடியாத ஜனாதிபதி, வேறெந்த அரச நிறுவனத்தையும் பொறுப்பேற்கமுடியாது எனக் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் நான்கு விசேட அமர்வுகள் இடம்பெற்றன. சமாதானம், இலங்கையை மீளக் கட்டியெழுப்புதல், சிறந்த அரசியலமைப்பு மூலம் அரச சேவைகளை மக்களுக்குப் பெற்றுக்கொடுத்தல், கட்சியினுள் ஸ்திரமானநிலையை தோற்றுவித்தல் ஆகிய நான்கு முக்கிய விடயங்கள் குறித்து இந்த அமர்வுகளில் ஆராயப்பட்டன.

# மரபணு பரிசோதனைக் கூடம் அமைக்க வெளிநாட்டு உதவி கோரப்பட்டுள்ளது!

கொழும்பில் மரபணுப் பரிசோதனைக்கூடம் ஒன்று அமைக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் - இதற்கு வெளிநாட்டு உதவிகள் கோரப்பட்டிருப்பதாகவும், கொழும்புப் பல்கலைக்கழக சட்ட மருத்துவப்பீடம் அறிவித்துள்ளது.

கொழும்பில் மரபணுப் பரிசோதனை நிலையம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு, அரசாங்கத்திடம் நீண்டகாலமாகக் கோரிக்கை விடப்பட்டு வந்தது. ஆனால், இதற்கு அரசாங்கம் எந்த நடவடிக்கையையும் எடுக்காதநிலையிலேயே, வெளிநாட்டு உதவிகள் கோரப்பட்டிருப்பதாகக் கொழும்புப் பல்கலைக்கழகச் சட்டமருத்துவபீடம் தெரிவித்துள்ளது.

நாட்டில் அதிகரித்துவரும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு, குற்றவாளிகளை அடையாளம் காண்பதற்கான மரபணுப் பரிசோதனை செய்யப்படுவது அவசியம். மரபணுப் பரிசோதனைக்கான வசதிகளின்மையால் பெருமளவு வழங்குகள் நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்டு வருவதாகவும் சட்டமருத்துவபீடம் மேலும் தெரிவித்துள்ளது.



கரும்புலிகள் நினைவாக நெடுந்தீவில் நடைபெற்ற விளையாட்டு விழாவில், யாழ்.மாவட்ட துணை அரசியற் பொறுப்பாளர் செம்மணன் தேசியக் கொடியேற்றுவதைப் படத்தில் காணலாம். (படம்:கண்ணன்)

# திருமலையில் ராணுவத்தளம் அமைக்க அமெரிக்காவுக்கு யோசனை இல்லை!

## அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதி தெரிவிப்பு

திருகோணமலையில் இராணுவத்தளம் அமைக்கும் திட்டம் எதையும் அமெரிக்கா கொண்டிருக்கவில்லை என்று, அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதி ஜெரி லெவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் அழைப்பின் பேரில், ஐந்துநாள் விஜயமாகக் கொழும்பு வந்திருந்த இவர் - கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

இந்த மாநாட்டில் உரையாற்றிய அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதி -

பொருளாதார, வர்த்தக, சமூக உறவுகளை விரிவுபடுத்தவும், விஸ்தரிக்கவுமே இலங்கை அரசாங்கத்துடன் அமெரிக்கா பேச்சுக்களை நடத்தி வருகின்றது.

ஜனநாயகரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்துக்கு - சமாதான முன்னெடுப்புக்களில் அமெரிக்கா பூரண ஆதரவை வழங்கும். திருகோணமலையில் இராணுவத்தளம் ஒன்றை அமைக்க, அமெரிக்கா- இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதாகக் கூறப்படுவது முற்றிலும் தவறானது. வர்த்தக நடவடிக்கைகளை அதிகரிப்பதற்காக, மேலும் பல அமெரிக்கப்பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

சமாதான நடவடிக்கைகளில், சிகல்கள் நிலவியபோதும், கடந்த இருபது மாதங்களாக நாட்டில் அமைதி நிலவிவருகின்றது. பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

பொருளாதாரத்தை மறுசீரமைக்க அரசாங்கம் - தனியார் துறையினரின பங்களிப்புக்களைப் பெற தனது நடவடிக்கைகளைத் தொடரும் என்று அமெரிக்கா நம்புகின்றது. அமெரிக்காவே இலங்கையின் பாரிய பங்காளி என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில், அமெரிக்க காங்கிரஸின் இன்னொரு பிரதிநிதியான ஸ்கொட் கிறேட், அமெரிக்கத் துணைத்தூதுவர் டொனால்ட் காம்ப் ஆகியோரும் பங்கேற்றனர்.

# சுனில் தாப்ரு படுகொலை வழக்கு; அடையாள அணிவகுப்புக்கு உத்தரவு!

தெஹிவளைப் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சுனில் தாப்ருவின் படுகொலையில் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் நபர், எதிர்வரும் பதினைந்தாம் திகதி அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்படவுள்ளார்.

கல்கிசை நீதிமன்றத்தில் இந்த அடையாள அணிவகுப்பு இடம்பெறும். பொலிஸ் அதிகாரி சுனில் தாப்ருவைச் சுட்டுக்கொன்றதாகச் சந்தேகிக்கப்படும், கிருபாகரன் மதன்குமார் என்ற இளைஞரையே அடையாள அணிவகுப்புக்குட்படுத்த நீதிவான் உத்தரவிட்டார். இந்த அடையாள அணிவகுப்பில் மூன்று சாட்சிகளையும் - சந்தேகநபரை அடையாளம் காட்டுவதற்கு வருமாறு நீதிமன்றம் அழைப்பு விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# 'சிலுமின' செய்தியாளருக்கு கொலை மிரட்டல்; பிரதமர் ரணிலைத் தலையிடக் கோரிக்கை!

## சர்வதேச ஊடகவியலாளர் சங்கம் விடுத்தது

(கொழும்பு)

'சிலுமின' பத்திரிகையின் பத்திரிகையாளரான புட்டல ஜெயந்தவுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பது குறித்து, சர்வதேச ஊடகவியலாளர் சங்கம் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றது.

லேக்ஹவுஸ் நிறுவனத்தின் வார இதழான 'சிலுமின' வில் புட்டல ஜெயந்த - இலங்கையின் வங்கித்துறையில் நிலவும் முறைகேடுகள் மற்றும் மோசடிகள் குறித்த கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார்.

இதனைத் தொடர்ந்தே, அவருக்கு இனந்தெரியாத நபர்களிடமிருந்து கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது. இந்தக் கொலை அச்சுறுத்தல் குறித்தே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு- சர்வதேச ஊடகவியலாளர் சங்கம் கடிதம் ஒன்று அனுப்பிவைத்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உடனடியாக இந்த விடயத்தில் தலையிட்டு, கொலை மிரட்டல் விடுத்த நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த அமைப்புக் கேட்டுள்ளது.

ஊடகவியலாளர் மீதான இத்தகைய அச்சுறுத்தல்கள் - ஜனநாயகச் சூழலுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்பதால், உடனடியாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கையில் இறங்கவேண்டும் என்றும் சர்வதேச ஊடகவியலாளர் சங்கம் தனது அறிக்கையில் மேலும் கேட்டுள்ளது.

# ஜனாதிபதி சந்திரிகாவை நம்ப முடியாதுள்ளது!

## ஜே.வி.பி. எம்.பி கூறுகிறார்

வீட்டு விறாந்தையில் வைத்துக் கதைத்துவிட்டு வெளியில் அனுப்பும் தந்திரத்துடன்தான் பொதுஜன ஐக்கிய முன்னணி பேசுவதாக, ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்கந்த தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியுடனான ஒப்பந்தம் ஒன்று யதார்த்தபூர்வமாகச் சரிவருமா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க மீது முழுமையாக நம்பிக்கை வைக்கமுடியாது. லங்கா சமசமாசக் கட்சிக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் - பொதுஜன ஐக்கிய முன்னணி எத்தனை துரோகங்களைச் செய்தது என்று நாம் அறிவோம் எனறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சிறுவர் பாதுகாப்புக் குறித்து மூன்று நாட்கள் கருத்தரங்கு!

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் கருத்தரங்குகள் எதிர்வரும் 9 ஆம், 12 ஆம், 21 ஆம் ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்குச் சிறுவர் இல்லங்களை நடத்தும் ஊழியர்களுக்கும் , பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் இக்கருத்தரங்கு நடைபெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி மாலை 3 மணிக்குச் சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்களுக்கும், 21 ஆம் திகதி தனியார்கல்வி நிலைய இயக்குநர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், இந்தக் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

முதல் இரண்டு கருத்தரங்குகளும் யாழ்.வீரசிங்கம் மண்டபத்திலும், 21 ஆம் திகதி நடைபெறும் கருத்தரங்கு, வை.எம்.சி.ஏ. மண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

சாந்திக உளவளத்துறை நிலையப் பயிற்றுவிப்பாளர்களின் ஆதரவுடன் நடைபெறும் இக்கருத்தரங்குகளில் - பேராசிரியர்கள், சட்டத்தரணிகள், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இக்கருத்தரங்குகளில் சிறுவர் துஷ்பிரயோகங்கள், சிறுவர்களை வழிநடத்தும் முறை போன்றவை பற்றி ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.




உலக சென்.ஜோன்ஸ் தின வைபவம் அண்மையில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெற்றபோது, தீவக உதவி மாவட்ட ஆணையாளர் இ.அசோகன் உரையாற்றுவதையும், பிரதம விருந்தினரான நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் உட்பட பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: கே.பிரசாந்தன்)

# அல்வாய் விபத்து சம்பவத்தில் மூவர் படுகாயமடைந்தனர்!

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் - லான்ட் மாஸ்ருடன் விபத்துக்குள்ளானதில், மூவர் காயமடைந்தநிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு அல்வாய் முத்துமாரி அம்மன் கோயிலுக்கு அண்மையில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற பருத்தித்துறை மூன்றாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த சுப்பிரமணியம் நந்தகுமாரன் (வயது 27), சுந்தரலிங்கம் ஜெயகாந்தன் (வயது 26), உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த ஆறுமுகம் முருகையா (வயது 41) ஆகிய மூவருமே காயமடைந்தனர்.

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் - எதிரே வெளிச்சமின்றி வந்த லானட்மாஸ்ருடன் மோதி விபத்துக்குள்ளானதில் இவர்கள் காயமடைந்தனர்.

# மெல்லக் கற்கும் மாணவருக்கு போஷாக்கு வழங்கும் திட்டம்!

(அராலி)

மூளாயிலுள்ள சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம், சங்கானை கோட்டத்தில் மூன்று பாடசாலைகளில் மெல்லக் கற்போர் வகுப்பு மாணவர்களுக்குப் போசாக்கு உணவு வழங்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்தப் போசாக்கு உணவு வழங்கும் திட்டம் - வட்டுக்கோட்டை கார்திகேயா வித்தியாலயம், மூளாய் அமெரிக்கன்மிஷன் தமிழ்கலவன் பாடசாலை, தொல்புரம் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளிலேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

வாரத்தில் மெல்லக்கற்போர் வகுப்பு நடைபெறும் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் போஷாக்கு உணவு வழங்கப்பட்டு வருவதாக நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் தா. இராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

# வடமராட்சி வலயத்தில் ஆங்கிலதினப் போட்டி

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலயப்பாடசாலைகளில் - கோட்ட மட்டத்திலான ஆங்கிலமொழித்திறன் போட்டிகள் நடைபெறவுள்ள இடங்கள் பற்றிய விபரங்களை, வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

கரவெட்டி கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் - நாளையும், 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் வதிரி திரு இருதயக்கல்லூரியில் பி.ப 2.30 மணிக்கும்,

பருத்தித்துறை கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகள் - நாளைமறுநாளும், வியாழக்கிழமையும் - வட இந்து மகளிர் கல்லூரியில் பி.ப 2.30 மணிக்கும்,

மருதங்கேணி கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான போட்டிகள் - எதிர்வரும் புதன்கிழமை மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையிலும், குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளன. (122)

# வெண்புறா நிறுவன ஏற்பாட்டில் மிதிவெடி விழிப்புணர்வு செயற்பாடு!

யாழ்.மாவட்டத்தில் மிதிவெடி அபாயம் அதிகமுள்ள பகுதிகளில் வாழும் பொதுமக்களுக்கு, வெண்புறா நிறுவனம், வெடிபொருட்கள் பற்றிய விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றது.

வெடிபொருட்கள் தொடர்பாக வீடு வீடாகச் சென்றும், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் ஊடாகவும் பொதுமக்களுக்கு வெடிபொருட்கள் தொடர்பாக விழிப்புணர்வு பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி, கடந்த மே மாதத்தில் கொழும்புத்துறை பகுதியில் 3328 பேருக்கும், ஜூன் மாதத்தில் அரியாலைப்பகுதியில் 7690 பேருக்கும் வெடிபொருட்கள் பற்றிய விழிப்புணர்வு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இம்மாதம் கோப்பாய் பகுதியில் வெடிபொருட்கள் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# முன்பள்ளிகளின் ஏற்பாட்டில் சங்கானையில் கண்காட்சி!

(அராலி)

வலி.மேற்கு பிரதேசசபை உப அலுவலகப் பிரிவுக்குட்பட்ட முன்பள்ளிகளும், சிறுவர்கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனமும் இணைந்து நடாத்தும் கண்காட்சி நிகழ்வு இன்று காலை 9 மணிக்குச் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராகப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கிருஸ்ணசாமி கலந்துகொண்டு நிகழ்வினை ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினராக உதவிப் பிரதேச செயலாளர் மு.சிவராசா கலந்துகொள்வார்.

இந்தக் கண்காட்சியில் பல்வேறு துறைசார்ந்த விடயங்கள் காட்சிப்படுத்தவிருப்பதாகவும், இதில் மாணவர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (118)

## சின்னஞ்சிறு செய்திகள்

### வடமராட்சியில் கணிதபாட செயல்மர்வு

(ஆழியவளை)

வடமராட்சி கல்வி வலயத்தில் கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு - மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளரால் நடத்தப்படவுள்ளது.

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை நெல்லியடி ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ள இச்செயலமர்வுக்கு - கணிதபாட ஆசிரியர்கள் தவறாது சமுகம் தரவேண்டும் என, வடமராட்சி வலயக கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (122)

### சிறுவர் இல்ல விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள சிறுவர் இல்லங்களுக்கிடையே மாவட்ட ரீதியிலான விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சிறுவர் இல்லங்களுக்கிடையே நடாத்தப்படும் இப்போட்டியில் - பெருந்தொகையான சிறுவர், சிறுமிகள் கலந்து கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### சக்கர நாற்காலி வழங்கும் திட்டம்

(ஆழியவளை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கமும், சமூகசேவைகள் அமைச்சும் இணைந்து சக்கரநாற்காலி வழங்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளன.

நடக்கமுடியாத நிலையிலுள்ள சக்கரநாற்காலி தேவைப்படுபவர்கள் - தமது பிரிவு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (122)

# தாளையடி - உடுத்துறையில் புதிய தொலைபேசி இணைப்புகள்

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிய தொலைபேசி இணைப்புக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இவ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் - புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள தாளையடி, உடுத்துறை ஆகிய இடங்களில் வடமராட்சி கிழக்குப் புனரமைப்புக்குழுவினரால் இவை நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

மீள்குடியேற்றம் நடைபெற்ற மாமுனை தொடக்கம் சுண்டிக்குளம் வரையான பகுதியில் வசிக்கும் மக்கள் - இத்தொலைபேசி வசதிகளைப் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (122)

# கிளிநொச்சி பாடசாலையில் இருமாடிக் கட்டடம் அமைப்பு

(ஆழியவளை)

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் இரண்டு மாடிக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த திங்கட்கிழமை, பாடசாலை அதிபர் அரியரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இக்கட்டடத்திற்கான அடிக்கல்லை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயம் நாட்டி வைத்தார்.

மேற்படி கட்டடத்தினை அமைப்பதற்கு நிக்கொட் நிறுவனம் 38 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகத் தெரியவருகிறது. (122)



யாழ்.கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் பெயர் வளைவு திறப்பு விழாவில் பாடசாலை அதிபர் உரையாற்றுவதையும் - நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# அடைவு குறைந்த மாணவருக்கு விசேட மாலைநேர வகுப்புகள்!

(ஆழியவளை)

மருதங்கேணிக் கல்விக் கோட்டத்தில் மீள்குடியேற்றம் நடைபெற்ற இடங்களில் இயங்கிவரும் 10 பாடசாலைகளில் அடைவு குறைந்த மாணவர்களுக்கு ஜி.ரி.இசற் நிறுவனம், மாலைநேர வகுப்புக்களை நடாத்தவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை ஜி.ரி.இசற் நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் க.கந்தசாமி மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்காகத் தரம் 2 தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புக்களில் கல்விபயிலும் மெல்லக்கற்கும் மாணவர்களின் விபரங்கள் - பாடசாலை அதிபர்கள் மூலம் திரட்டப்பட்டுவருகின்றன. (122)

# வடமராட்சி கிழக்கில் அமைக்கப்படும் மீனவர் இளைப்பாறும் மண்டபங்கள்

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய கிராமங்களில் - மீனவர் இளைப்பாறும் மண்டபங்கள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த மீனவர் இளைப்பாறும் மண்டபங்களை அமைப்பதற்கு நிக்கொட் நிறுவனம் தலா 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

வடமராட்சி கிழக்கு புனரமைப்புக்குழுவினர் இந்த வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செய்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (122)

### ஆனி உத்தரப் பொங்கல் விழா

கிளிநொச்சி - சக்திபுரம் (எள்ளுக்காடு) ஶ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய ஆனி உத்தரப் பொங்கல் விழா இன்று நடைபெறவுள்ளது. மேற்படி நிகழ்வில், அபிஷேக ஆராதனை, அன்னதானம், என்பவற்றுடன் பொங்கல் விழாவும் இடம்பெறவுள்ளது.

# தேவை நல்ல விளை நிலங்கள்

உலக சர்வகலாசாலைகள் தடகளப்போட்டிகளில் கலந்துகொள்ள, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து தெரிவாகியுள்ளவர் - மருத்துவபீட முதல் வருடப் பட்டதாரி மாணவர் அரியநாயகம் துஷ்யந்தன். இவ்வருடம் ஓகஸ்ட் மாதத்தில் **DAEGU-KOREA** இல் நடைபெறவுள்ள தடகளப் போட்டிகளில், இவர் 100 **m** ஓட்டத்தில் பங்குகொள்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். குறித்தொரு அடைவு மட்டத்தின் அடிப்படையில், இலங்கைப் பல்கலைக்கழகங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்கள் கலந்துகொண்ட தடகளப் போட்டிகள், கடந்த மாதத்தில் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்றன. இப்போட்டிகளில் யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து கலந்துகொண்ட இரு போட்டியாளர்களுமே, கொரிய நாடு செல்லத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். ஒருவர் 110 **m** தடைதாண்டல் ஓட்டத்தில் முதலிடம் பெற்ற ரஞ்சித்குமார். இன்னொருவர் 100 **m** ஓட்டத்தில் முதலாமிடம் பெற்ற துஷ்யந்தன். இவரது விளையாட்டுத்துறை ஆர்வம் பற்றிக் கலந்துரையாடச் சந்தர்ப்பம் கிடைத்தபோது, பல விடயங்களைக் கலந்துரையாடினோம்.

ஆரம்பக் கல்வியிலிருந்து, க.பொ.த. (உ/த) வரை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலேயே தனது கல்வியைத் தொடர்ந்த இவர், 1981.04.27 இல் பிறந்தவர். சிறு வயதில் இருந்தே தடகளப்போட்டிகளில் ஆர்வம் உடையவராக இருந்த இவர் - 100 **m**, 200 **m**, முப்பாய்ச்சல், நீளம்பாய்தல் போன்ற நிகழ்வுகளில் பங்குபற்றி வந்துள்ளார்.

15 வயதுக்குட்பட்ட பிரிவிலிருந்து தொடர்ச்சியாக முதன்மை நிலை பெற்றுவந்திருக்கும் இவர், 1995 இல் மாவட்டநிலைப் போட்டிகளில் முதலிடம் பெற்றுள்ளார். தனது 17 வயதுக்குட்பட்ட பிரிவுக் காலத்தில் (1997, 1998) மாகாணத் தடகளப் போட்டிகளில் கலந்துகொள்ளத் தகுதி பெற்றிருந்தும், போக்குவரத்து வசதிகள் சீரற்றிருந்தமையால், அச்சந்தர்ப்பங்களைத் தவறவிட்டதாகவும் குறிப்பிடுகின்றார்.

துஷ்யந்தன் தான் கல்விகற்ற பாடசாலை உதைபந்தாட்ட அணியில் ஒரு அங்கத்தவராகவும் இருந்திருக்கிறார். 1998 இல் மாவட்ட ரீதியில் சாம்பியன் பட்டம்வென்ற, உதைபந்தாட்ட அணியில் தானும் ஒரு வீரராக இருந்தமையைப் பெருமையுடன் நினைவு கூர்கிறார்.

தனது கல்வியின் முக்கியத்துவம் கருதி 2000 - 2002 காலப்பகுதியில், விளையாட்டுத்துறையின் ஆர்வத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு, முற்றுமுழுதாகக் கல்வியில் கவனம் செலுத்திய அவர், 2003 இல் யாழ்.பல்கலைக்கழக மாணவராக மீண்டும் விளையாட்டுத்துறையில் புகுந்துள்ளார். யாழ்.பல்கலைக்கழகத்தில் தனக்கு மிகவும் பிடித்தமான 100 **m** நிகழ்வுடன், 200 **m** மற்றும் நீளம்பாய்தல் நிகழ்வுகளில் பங்குகொண்டு வருவதைக் குறிப்பிடுகின்றார்.

இவர் தனது விளையாட்டுத்துறை வளர்ச்சியில், உதவியவர்கள் பற்றிக்கூறும்போது, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில், தனது விளையாட்டுத்துறைப் பயிற்றுநராக இருந்த ஆசிரியர் செல்வகுமரன் **(PTI)** அவர்களைப் பெருமதிப்புடன் நினைவு கூருகின்றார். தனது நிகழ்வுகளின் நெளிவு சுழிவுகள் தெரியாமல் இருந்த ஒரு பருவத்தில், தடகளப் போட்டிகள், நிகழ்வுகள் பற்றிய எண்ணக்கருவை எடுத்துக்காட்டியவர் அவர்தான் என்று கூறுகிறார். அதைத் தொடர்ந்து தனது கல்வியிலும், விளையாட்டுக்களிலும், நம்பிக்கையூட்டும் துணையாக இருந்த தாய், தந்தையர், அக்கா, சிறப்பாக இரண்டு அண்ணாக்களின் ஆதரவு என்பவற்றைக் குறிப்பிடுகின்றார். அண்ணாமார் இருவரும் தடகள வீரர்களாக இருந்தமை, தனது வளர்ச்சிக்குப் பெருந்துணையாக இருந்ததைப் பெரும் அதிர்ஷ்டம் என்கிறார் இவர். பாடசாலைக் காலத்தில், கல்லூரி அதிபர் விளையாட்டுக்கு நேரம் ஒதுக்குவதில் பல சலுகைகள் தந்தமை தனது விளையாட்டு ஆர்வத்தில் நம்பிக்கை வளரக் காரணமாக இருந்ததை எடுத்துக்கூறும் இவர், பல்கலைக்கழகத்தில் ராதை அவர்களின் வழிகாட்டல் மிக உயர்தரப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கு இலகுவாக வழிகாட்டியதை நன்றியுடன் நினைவு கொள்கிறார்.





அ. துஷ்யந்தன்

தனது அனுபவங்கள் பற்றிக் குறிப்பிடும்போது, சரியான மைதான வசதியில்லாத நிலையில், 100 **m** என்று - தான் கடந்த தூரம் சரியா, குறைவா என்பது கூடத்தெரியவில்லை. ஆனால், பல கட்டங்கள் கடந்துவந்த பின்னரே, இன்று உலகமே ஆவலுடன் எதிர்பார்க்கும் அந்த 100 **m** என்பது என்ன? ஒவ்வொரு மீற்றருக்கும் எவ்வளவு முக்கியத்துவம் உண்டென்பதெல்லாம் புரிகிறது, என்கிறார். யாழ். பல்கலைக்கழகத்தில் நுழைந்த பின்பே ஓரளவு நுட்பஅறிவு, வசதிகள், ஒழுங்குமுறையான பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தது என்று குறிப்பிடும் துஷ்யந்தன், உயர்தரத்திலான தடகள வீரர்கள் - தமிழ் மண்ணில் உருவாகவேண்டுமானால், சகலதுறைகளிலும் எவ்வளவோ அபிவிருத்திகள் செய்யப்படவேண்டும் என்கிறார்.

இறுதியாக அவர் கல்வியையும், விளையாட்டையும் இணைத்துக்கொண்டு, எப்படி மருத்துவபீடத்தில் நுழைய முடிந்தது என்று கேட்டோம். அவரது பதில் மிகப்பொறுப்பாக வெளிவந்தது. கல்விதான் முதன்மை. விளையாட்டுக்கள் அதற்குப் பக்கத்துணையாகத்தான் இருக்கமுடியும். ஏனெனில், விளையாட்டால் மட்டும் தன்வாழ்க்கையில் உயரும் சந்தர்ப்பங்கள் தமிழ் இளைஞருக்கு மிகக்குறைவு என்கிறார். தொழில்சார் ரீதியான வளர்ச்சிக்கு ஏற்றவாறு விளையாட்டுத்துறை வாய்ப்புக்கள் இல்லை என்னும் உண்மையை வலியுறுத்தும் இவர், கல்விக்கே முதன்மை கொடுக்கவேண்டும் என்கிறார். இரண்டு துறைகளிலும் ஒரே சமயத்தில் வளர்ச்சி காணவேண்டுமாயின் சரியான திட்டமிடலின், குறித்த நேரத்தில் குறித்த விடயங்களைச் செய்தல்மூலம் நேரத்தை ஒதுக்கிக்கொண்டு, கடின உழைப்பையும் சேர்த்துக் கொண்டால், வெற்றி நிச்சயம் என்பதைப் பாடசாலை மாணவர்கள் மனதில் கொள்ளவேண்டும் என்கிறார். இந்த ஆலோசனையைக் கூறத் துஷ்யந்தனுக்கு சகல தகுதிகளையும் கொடுத்ததும் இந்தத் திட்டமிடலும், அர்ப்பணிப்பும்தான் என்று எண்ணத் தோன்றியது.

எல்லாம் மகிழ்ச்சியானதொரு சூழ்நிலையில் இருந்தாலும், கொரிய நாட்டுக்குத் துஷ்யந்தன் சென்றுவர ஒரு இலட்சம் ரூபா தேவை என்பதையும், அதனை அவரே சேகரித்துக்கொள்ளவேண்டும் என்றும் கூறியபோது, மனதுக்கு நெருடலாக இருந்தது. இருந்தும், யாழ். பல்கலைக்கழகம் பல்வேறு நடைமுறைகள் மூலம் தனக்கு அந்தப் பணத்தைச் சேகரித்துத் தருவதாகக் கூறியிருப்பதாக அவர் கூறியபோது, மிகுந்த மகிழ்ச்சியாகவும், எமது மண்ணின் உயர்ந்த உயர்கல்வி நிறுவனத்தின் மீதிருந்த பெருமதிப்பு, இன்னும் கிளைவிட்டுப் பரந்தது. ஏனெனில், எமது மண்ணின் அதிதிறமைவாய்ந்த பல வீரர்கள், நிதிவசதியின்மை என்னும் ஒரு காரணத்தினால் நொருங்கிவிடுவதைக் காண்கிறோம்.

துஷ்யந்தன் என்னும் நல்லதொரு விதை, வளம் நிறைந்த பல்கலைக்கழக மண்ணில் விழுந்து துளிர்விட்டிருப்பது நல்லதொரு விருட்சத்தின் வளர்ச்சிக்கே என்பது மகிழ்ச்சியானது. நல்ல மனங்களின் வாழ்த்துக்கள் துஷ்யந்தனுக்கு என்றும் உண்டு.

**- ஜோசப் கிருஷ்ணா.**

# பாண்டவர் யார்?


98 இல் கமரூன் வீரர்கள் - 2006 இலும் விளையாடுவார்கள்

**2006** ஆம் ஆண்டு நடைபெறப்போகும் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளுக்கான தொடர் ஆட்டங்கள் ஆரம்பித்துவிட்டன. இந்தவகையில், ஆபிரிக்கக் கண்டத்திலிருந்து ஐம்பத்தொரு நாடுகள், உலகக்கிண்ணப் போட்டிகளில் கலந்துகொள்ளத் தகுதிபெறும் ஐந்து இடங்களுக்காகப் போட்டியிடப்போகின்றன.

அதற்கு முன்னதாகப் பாரிஸ் நகரில் குழுத்தெரிவுகள் நடைபெறப்போகின்றன. மொத்தமான நாடுகளில், நாற்பத்திரண்டு நாடுகள் முதல் சுற்றுக்குப் பிரிக்கப்பட, ஒன்பது நாடுகள் இரண்டாவது சுற்றுக்கு இயல்பாகத் தகுதிபெற்றுள்ளன. இந்த ஒன்பது அணிகளும் கடந்த, ஜப்பான் - கொரியா உலகக்கிண்ணப் போட்டிகளில் கலந்துகொண்ட ஐந்து அணிகளான - கமரூன், நைஜீரியா, செனெகல், தென்னாபிரிக்கா மற்றும் ரியூனிசியா ஆகும். எஞ்சிய நான்கும் **FIFA** தரப்படுத்துதலில் உயர்வானதாக இருக்கும் - மொறொக்கோ, எகிப்து, சிம்பாப்வே மற்றும் ஐவரிகோஸ்ட் நாடுகளாக இருக்கலாம். விலகல்முறையில் நடைபெறும் முதற்கட்டத்தில் தெரிவாகும் இருபத்தொரு அணிகளுடன், இந்த ஒன்பதும் இணைந்து முப்பது நாடுகள் இரண்டாவது கட்டத்தை உருவாக்கும். இந்த முப்பது நாடுகளும் ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட, ஒரு குழுவில் ஆறு நாடுகள் என்றவாறு குழு அமையும். ஒவ்வொரு குழுவிலும் முதன்மைபெறும் அணி என்றவாறு ஐந்து நாட்டு அணிகள், 2006 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் உலகக்கிண்ணப் போட்டிகளில் கலந்துகொள்ள ஜேர்மனிக்குச் செல்லவுள்ளன. அதேவேளை, ஒவ்வொரு அணியிலும் முதல் மூன்று அணிகள் எகிப்தில் நடைபெறும் **NATIONS CUP** ஆட்டங்களில் கலந்துகொள்ளும். இது ஆபிரிக்க சாம்பியன்ஷிப்பாக அமைவதுடன், உலகக்கிண்ணத்துக்கு ஆறு மாதம் முன்னதாக நடைபெறும்.

பொதுவாக - உதைபந்தாட்ட ரசிகர்கள் ஆபிரிக்க நாடுகள் என்ற வகையில், சிறப்பாக கமரூன் மற்றும் நைஜீரியா, மொறொக்கோ போன்ற நாடுகள் தொடர்பில் பரிச்சயம் உடையவர்களாகவே இருக்கிறார்கள். மேலும் நிறையப் பிரச்சினைகள் இருந்தாலும்கூட, உதைபந்தாட்டம் என்பது- ஆபிரிக்க நாடுகளில் முதன்மையான விளையாட்டாக மட்டுமன்றி, மிகுந்த தரங்கூடிய விளையாட்டாகவும் இருப்பதை உணர்ந்துகொள்ள முடியும். இலங்கை - இந்திய உதைபந்தாட்ட அணிகள் உலகக்கிண்ணப் போட்டிகளில் பங்குகொள்வது என்பதை, இந்தவேளையில் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாததொன்று. ஏன்? ஆபிரிக்காவின் பலம்குறைந்த அணிகளுடன்கூட சமாளிப்பார்களா என்பது கேள்விக்குறியே. ஆபிரிக்காக் கண்டத்திலிருந்து தெரிவு செய்யப்படப் போகும் அணிகள் பற்றி அறிய அடுத்த வருடம் வரை பொறுத்திருக்கவேண்டும். ஏனெனில், இந்த ஆட்டங்கள் ஆரம்பிக்கப்போவது இந்த வருடம் ஒக்ரோபரில் தான்.

**- சரண்யன்**


நைஜீரியா - இலகுவானதல்ல

# அலைகள் ஓய்வதில்லை!


இம்ரான் - கபில்தேவ்
'அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே'

இந்திய - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான அரசியல் சார்ந்த கருத்து வேறுபாடுகளால் பரஸ்பரம் இரு நாடுகளையும் பெரிதும் பாதித்த விளையாட்டு - கிரிக்கெட்டாகத்தான் இருக்கமுடியும். தற்போது அரசியல் ரீதியாக இருநாடுகளுக்கும் இடையில் இறுக்கம் சற்றுத் தளர்ந்துவரும் நிலையில், பாகிஸ்தானும் இந்தியாவும் கிரிக்கெட் உறவுகளை இரு நாடுகளிலும் சென்று விளையாடுவது என்ற வகையில், சீர்படுத்திக்கொள்ள முனைவதை அவதானிக்க முடிகின்றது. இந்தியாவின் பக்கம் நின்று பார்க்கும்போது, பாகிஸ்தானில் சென்று இந்தியா விளையாடக்கூடாது என்று குரல்கள் எழுந்தாலும், அது மிகவும் பலவீனமானதாகவே இருப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது. இந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஒரு முன்மொழிவை முன்வைத்திருக்கிறது. உத்தியோகபூர்வ ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளை இருநாடுகளும், இருநாட்டு மண்ணிலும் விளையாடுவதற்கு முன்னோடியாக, இந்த வருடத்தின் இறுதிப்பகுதியில்- நட்புறவுத்தொடர் என்ற ரீதியில் இரண்டு ஒருநாள் போட்டிகள் விளையாடலாம் என்பதே அது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் தாக்கூர் சியா, மேலும் கூறுகையில், "முதலில் இந்தியா, செம்ரெம்பரில் பாகிஸ்தானுக்கு வந்து முதலாவது ஒருநாள் போட்டியில் விளையாடும் என்ற கருத்தை முன்வைத்துள்ளோம். பின்னர், நாங்கள் ஒக்ரோபரில் இரண்டாவது ஆட்டத்துக்கு இந்தியாவுக்குச் செல்வோம்", என்கிறார்.


நெஞ்சம் மறப்பதில்லை

இதேவேளை, இந்தியக் கிரிக்கெட் சபையும் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளதை அறியமுடிகிறது. இந்த வகையில் - இந்திய 'A' அணி மற்றும் 19 வயதுக்குட்பட்ட அணி என்று இரண்டு அணிகளைப் பாகிஸ்தானுக்கு அனுப்பும் சாயல் தெரிகின்றது. இந்த வருட இறுதியிலேயே இந்த அணிகளும் பாகிஸ்தான் செல்லும் என்பது போன்ற கருத்துக்கள் வெளிவருகின்றன. இந்திய 'A' அணியானது, பாகிஸ்தானில் நடைபெறும் முக்கோணக் கிரிக்கெட் போட்டித்தொடரொன்றில் கலந்துகொள்ளலாம் என்றும் நம்பப்படுகின்றது.

மிகவும். இறுக்கமான பார்வைகளைக் கொண்டிருந்த இருநாடுகளும், தற்போது சாதுவாக மென்போக்கைக் காட்டும் இந்த வேளையில், இன்னும் நிலைமையைச் சுமுகமாக்கக் கிரிக்கெட் உதவும் என்பதில் சந்தேகமில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக இந்தியா - பாகிஸ்தான் அணிகளின் பங்குபற்றலுடன் கிரிக்கெட் என்றால், அதன் எதிர்பார்ப்பு மிகவும் அபரிதமானது. இம்முறை நல்லதே நடக்கவேண்டுமென்று கிரிக்கெட் ரசிகர்கள் விரும்புகின்றார்கள்.

**- செந்தூரம்.**

# வில்வீரன் முதல்வன்



அர்ஜுன - சறுக்கல் தோல்வியல்ல

அர்ஜுன ரணதுங்கவின் கிரிக்கெட் தாயகம் என்றால் அது SSC கழகம் தான். ஏனெனில், தனது பாடசாலைப் பருவத்திலிருந்து இக்கழகத்துக்காகக் கிரிக்கெட் விளையாடியது மட்டுமன்றி, இன்றுவரை கழகத்துடன் இணைந்திருப்பவர் அவர்.

கடந்தமாதம் இலங்கைக் கிரிக்கெட் சபையின் தலைமைப் பதவிக்கு அர்ஜுன போட்டியிட்டபோது, SSC கழக நிர்வாகசபை உறுப்பினர்கள் அர்ஜுனவுக்குப் பதிலாக திலங்க சுமதிபாலவுக்கே வாக்களித்தனர். அந்தவேளையில் SSC கழகம் அர்ஜுனவைக் கைவிட்டவிதம் பற்றிப் பலதரப்பாலும் ஆதங்கம் தெரிவிக்கப்பட்டதுடன் பெரும் அதிர்ச்சியையும் உருவாக்கியிருந்தது.

ஆனால், அர்ஜுன நம்பிக்கை இழக்கவில்லை. எதிர்காலத்தில் பலவிடயங்கள் தெரியவரும் என்று கூறியிருந்தார். அதில் ஒன்று இப்பொழுது நடைபெற்று முடிந்துள்ளது. அண்மையில் நடந்தேறிய SSC கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் அர்ஜுன நிர்வாகக் குழுவின் அங்கத்தவர்களுள் ஒருவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அர்ஜுன, தனக்குப் பொதுச்சபையில் பெரும் ஆதரவு உண்டென்று கூறிவந்தமைக்கேற்ப 379 வாக்குகள் பெற்று நிர்வாகக் குழுவின் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். எனவே ஒன்று புலனாகிறது. SSC இன் பொதுச்சபை உறுப்பினர்கள் முன்னர் கொண்டிருந்த எண்ணத்தை, SSC இன் பொதுச்சபை உறுப்பினர்கள் கொண்டிருக்கவில்லை என்பது புலனாகிறது.

அதுமட்டுமன்றி, அர்ஜுனவை அமோகமாக ஆதரித்துள்ளார்கள் என்பதும் தெளிவாகத் தெரிகின்றது. எனவே, இலங்கைக் கிரிக்கெட்டின் எதிர்காலத்துக்கு அர்ஜுனவின் பங்களிப்பு நிறையக்கிடைக்க வாய்ப்பு உண்டெனும் நம்பிக்கையும் உருவாகின்றது. அர்ஜுன ரணதுங்க இலேசில் மறந்துவிடப்படக்கூடியவரல்ல. அவர் கிரிக்கெட் விவகாரங்கள் பற்றிக் களத்தினுள்ளும் வெளியேயும் நிறைய அனுபவம் பெற்றவர். அவரது பங்களிப்பு இலங்கையின் எதிர்காலக் கிரிக்கெட் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானது என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள்.

# பெல்ஜியத்தை ஆக்கிரமித்த அமெரிக்கா

விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் இறுதிக்கட்டத்தை அடைந்துகொண்டிருக்கும் இந்த வேளையில், 1992 ஆம் ஆண்டில் வென்ற அன்ரி அகாஸி பத்து வருடங்களின் பின், விம்பிள்டன் ஒற்றையர் ஆண்களின் பட்டம் வெல்வார் என்ற எதிர்பார்ப்பு தவிடுபொடியாயிற்று. அவுஸ்திரேலியாவின் மார்க் பிலிப்போசிஸ்டம் அகாஸி தோல்வியுற்று, விம்பிள்டனில் இருந்து வெளியேறுகிறார். மறுபுறம் மிகவும் ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்பட்ட மகளிர் ஒற்றையர் ஆட்டத்தின் இறுதிப்போட்டியில் சந்திக்கப்போகிறவர்கள் - அமெரிக்காவின் வில்லியம்ஸ் சகோதரிகள். குறிப்பாக, ப்ரெஞ் ஓப்பன் போட்டிகளின் தோல்வியின் பின் விம்பிள்டன் வந்துள்ள செரினா வில்லியம்ஸ் என்ன செய்வார் என்ற எதிர்பார்ப்பு எல்லோரிடமும் இருந்தது.

செரினாவும் ஆர்வத்துக்குத் தீனிபோடுவதுபோல, கால் இறுதி ஆட்டத்தில் ஜெனிபர் கப்ரியாட்டியைத் தோற்கடித்து, பெல்ஜியத்தின் ஜஸ்ரின் ஹெனின் ஹார்டென்னைச் சந்தித்துத் தாள் கிளப்பியுள்ளார். மறுபுறம் வீனஸ் வில்லியத்தைச் சந்திக்க இருந்தவர் பெல்ஜியத்தின் கிம் கிளிஜ்ஸ்டர்ஸ். இந்த இரு பெல்ஜியப் பெண்மணிகளுமே ப்ரெஞ்ச் ஓப்பனில் இறுதிப் போட்டியில் சந்தித்தவர்கள். விம்பிள்டன் மகளிர் ஒற்றையர் போட்டி விசேடம் என்னவென்பதில் இரண்டு அரையிறுதிப் போட்டிகளும் அமெரிக்க - பெல்ஜிய ஆட்டங்களாக அமைந்துவிட்டதுதான்.

இதேவேளை - நான்கு கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் இறுதியில் சந்தித்துக்கொண்டவர்கள் - சகோதரிகள் செரினாவும், வீனசுமே. ஆனால், ஒரு ஆட்டத்திற்கூட, தங்கை செரினாவை வென்று முடிசூடிக்கொள்ள அக்காவால் முடியவில்லை. ஆனால், உடல் உபாதை மற்றும் மழை என்பன வீனஸ் வில்லியத்தை சற்றுத் தளர்ச்சிக்குள்ளாக்கினாலும், தோல்விகண்ட கிம் கிளிஜ்ஸ்டர்ஸ் ஆட்டத்தின் பின் கருத்துக்கூறும்போது, மழையின் பின் மீண்டும் ஆட்டம் ஆரம்பித்தபோது வீனஸ் படுபயங்கர வேகத்தில் விளையாடினார் என்கிறார். ப்ரெஞ்ச் ஓப்பனில் இதே உபாதைகள் நாலாவது சுற்றில் வீனஸ் வெளியேறக் காரணமாயிற்று. ஆனால், விம்பிள்டனில் வீனஸ் எதையுமே விட்டுக்கொடுக்கவில்லை. இறுதிப்போட்டியில் தங்கையிடமும் எதையும் எதிர்பார்க்கப்போவதுமில்லை. இருதடவை விம்பிள்டன் வென்றவர் வீனஸ். சகோதரியைத் தோற்கடித்தே சாதனை படைத்தவர் செரினா. இறுதிவெற்றி வீனஸுக்கா, செரினாவுக்கா? பொறுத்திருந்து பார்க்கலாம்.



செரீனா

-ரோஜா

# ஊகிக்க முடியுமா?



கடந்த வாரம் பிரிட்டனின் 100m வெற்றி வீரர் சேம்பர்ஸ் - நைஜீரிய வீரர் டெஜி அலியூவினால் 100m ஓட்டத்தில் தோற்கடிக்கப்பட்டது, பெரும் அதிர்ச்சிச் செய்தியாகப் பேசப்பட்டது. அதைவிட அதிர்ச்சியானதொரு செய்தி தொடர்ந்துவந்தது. கிளாஸ்கோவில் அந்த ஆச்சரியம் நடந்தது. சேம்பர்ஸ் ஒஸ்லோவில் - தனது நாட்டவரான மார்க் லூயிஸ் பிரான்ஸிஸாலும் 100m ஓட்டத்தில் தோற்கடிக்கப்பட்ட பின், கிளாஸ்கோவில் சேம்பர்ஸ் மார்க் லூயிஸ் மற்றும் ரிம்மொன்ட் கொமரி மூவரும் 100m களத்தில் சந்தித்தார்கள். இந்தப் போட்டியில் பழிக்குப்பழி வாங்குவதுபோல் மற்றைய இருவரையும் கவிழ்த்து, சேம்பர்ஸ் 10.15 செக்கன்களில் முதலிடம் தட்டிக்கொண்டார். இரண்டாவதாக வந்த ரிம்மொன்ட் கொமரி, எடுத்துக்கொண்ட நேரம் 10.26 செக்கன். மார்க் லூயிஸ் எடுத்துக்கொண்ட நேரம் 10.28 செக்கன்கள். பின்வந்த இருவருமே சில காரணங்கள் கூறினாலும், சேம்பர்ஸின் முதலிடம் என்பது முதலிடம்தான். இது ஒருபுறமிருக்க, சேம்பர்ஸ் ஜூலை மாதம் 13 ஆம் திகதி நடைபெறவிருக்கும் தடகளப் போட்டிகளில் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். இங்கு பிரித்தானிய வீரர்களுடனேயே போட்டி என்றாலும், மிக ஆபத்தான மார்க்லூயிஸை - சேம்பர்ஸ் சமாளித்தேயாக வேணடும். இந்தப் போட்டிகளில் 100m, 200m இரண்டிலும் கண் வைக்கிறார் சேம்பர்ஸ். ஆனால், ஒகஸ்ட் நெருங்க நெருங்க **Tension** அதிகரிக்கிறது ரசிகர்களுக்கு. **Paris World Champion Ship,** இந்த 100m ஜாம்பவான்கள் எல்லோரையும் ஒன்றுசேர்க்கப்போகிறது. அதில் யார் அந்த வேகமான மனிதர்? இதுவே கேள்வி. இன்னொரு புறம் இன்னொரு அதிர்ச்சிச் செய்தி. நைஜீரிய வீரர் டெஜி அலியூ மீண்டும் உலகத் தலைப்புச் செய்திகளில். ஏனென்றால், லுசேனில் டெஜி போட்டியிட்டது ஒலிம்பிக் 100m சாம்பியன் மொறிஸ் கிறனுடன். ஆனால், அதிர்ச்சிகரமாக மொறிஸ் கிறீன் 10.11 செக்கன்களில் 100 மீற்றரை ஓடி, மூன்றாவது இடத்தையே பெற்றுக்கொள்ளமுடிந்தது. ஆனால், இன்னொரு அமெரிக்கரான பேர்ணாட் வில்லியம்ஸ் 10.10 செக்கனில் இரண்டாம் இடம்பெற, 10.03 செக்கன் மட்டும் எடுத்து, நைஜீரிய நாட்டைச்சேர்ந்த டெஜி முதலிடம் பெற்றுக்கொண்டார். ஆனால், இந்தப் போட்டி இன்னும் சுவையாக இருந்திருக்கும், ரிம் மொன்ட் கொமரி கலந்துகொண்டிருந்தால். இருந்தும் இங்கு பெறும் தங்கப் பதக்கத்தை விடவும் மேலான அரிய தங்கப் பதக்கம் ஒன்று, அமெரிக்காவில் மொன்ட் கொமரியை எதிர்நோக்கிக் காத்திருந்தது. அதுதான் மரியன் ஜோன்ஸ் பெற்றெடுத்த **Junior Time.** மகனைப் பார்த்து முத்தமிடுவதைவிட, வேறென்ன் வேலை என்பதுபோல, இரண்டு தடகளப் போட்டிகளைக் கைவிட்டு மொன்ட்கொமரி அமெரிக்காவுக்குப் பறந்து விட்டார். இந்த விலகலுக்காக யாரும் மொன்ட் கொமரியைக் குறைசொல்லமாட்டார்கள். மாறாகச் சரியான முடிவொன்றையே எடுத்துக்கொள்வார்கள். அதுசரி. பிரான்ஸ் **World Champion Ship** 100m வீரர் யார்? யாராவது சொல்வீர்களா?



மெறிஸ் கிறீன்



சேம்பர்ஸ்



லூயிஸ்

- மக்டலின் மரியா.

# தூரத்து இடிமுழக்கம்

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் இறுதித் திருவிழாவுக்கு வருமுன் பிராந்திய ரீதியில் போட்டியிட்டுத் தம் திறமைகளை நிரூபித்தேயாகவேண்டும். ஏனெனில், 32 இடங்களுக்குப் போட்டியிடுவன நூற்றுக்கு மேற்பட்ட நாடுகள். இந்தவகையில் ஓஷாணியப் பிராந்தியத்தில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து உட்பட பதினொரு நாடுகள் அங்கம்வகிக்கின்றன. ஏறத்தாழ ஒன்றரை வருடங்களுக்கு முன்னர், செப்பிளெட்டர் **FIFA** இன் தலைமைப் பதவிக்குப் போட்டியிடும்போது, தனது வாக்குவேட்டையைக் கருத்திற்கொண்டு ஓஷாணியப் பிராந்தியத் திறமையான அணி இயல்பாகவே, 2006 மற்றும் 2010 உலகக்கிண்ணப் போட்டிகளுக்குத் தெரிவாகும் என்று தெரிவிக்க, ஓஷாணியாப் பிராந்தியமும் மகிழ்ச்சியாகத தமது முழுவாக்குப் பலத்தையும் பிளெட்டருக்கு அளித்தது.

இப்பொழுது இந்தப் பிராந்தியத்தின் முதன்மையான அவுஸ்திரேலியாவுக்கு - (இவர்களுக்கே உலகக்கிண்ணப் போட்டியில் பங்கேற்கக்கூடிய சாத்தியமானது) ஒரு அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதாவது, பாரிஸில் நடந்த **FIFA** இன் பணிப்பாளர் குழுவில் இந்தச் சந்தர்ப்பம் மறுக்கப்பட்டு, அது தென் அமெரிக்கப் பிராந்தியத்துக்கு வழங்கப்பட்டுவிட்டது. இதன்பேரில் ஓஷாணிய முதன்மை அணி வேறு பிராந்திய அணியுடன் மோதியே உலகக்கிண்ணப் போட்டிகளுக்குத் தகுதிபெறமுடியும். இது அவுஸ்திரேலியாவுக்குச் சாதகமானதல்ல. இதனாலேயே தற்போது பிளெட்டருக்கு எதிராக, அவுஸ்திரேலியா போர்க்கொடி தூக்கியுள்ளது.

அவரை வாக்குத் தவறியவர் என்றும், நேர்மையற்றவர், முறையற்றவர் என்றும் பலவாறு கண்டித்துள்ளது. இது வெறும் அரசியலே தவிர விளையாட்டல்ல என்கிறார். அவுஸ்திரேலியப் பயிற்றுநர் பிராங்க் பரீனா. தென் அமெரிக்கா பலமான அணிகளுக்குச் சந்தர்ப்பம் கொடுப்பதற்காகத் தமக்குத் துரோகம் இழைக்கப்பட்டுவிட்டதாகக் குமுறுகிறார்கள் அவுஸ்திரேலியர்கள். இந்தச் செயல் உதைபந்தாட்ட வல்லரசுகள் பலம்குறைந்த நாடுகளை மிதிக்கும் செயலாகும் என்கிறார்கள் அவுஸ்திரேலியர்கள். எனவே, மொத்தத்தில் முதுகில் குத்தப்பட்ட ஆத்திரத்திலுள்ள ஓஷாணியப் பிராந்திய நாடுகளின் முதல்வர், அவுஸ்திரேலியா இனித் தமது வாக்குகள் என்றைக்குமே பிளெட்டருக்குக் கிடைக்காது என்று பிரகடனப்படுத்திவிட்டார்கள். நியூகலியோனியாவுக்கு **FIFA** அங்கத்துவம் கிடைக்கும் நிலையில், ஓஷாணியப் பிராந்தியத்தின் பலம் பன்னிரண்டாக அதிகரித்துவிடும். எனவே, அவுஸ்திரேலியாவையும் அயல் நாடுகளையும் தாஜா செய்யவேண்டியநிலை - **FIFA** இல், பதவிகள் என்று வரும்போது தனிநபர்களுக்கு ஏற்பட்டுவிடும். அதிலும் 3 ஆவது முறையாக 2006 இல் போட்டியிட விரும்பும பிளெட்டருக்கு ஒரு வாக்குக்கூடக் கிடைக்காது என்று அழுத்தம்திருத்தமாக அவுஸ்திரேலியா கூறிவிட்டது.

இதைவிட ஆசியப் பிராந்தியத்தினுள், ஓஷாணியப் பிராந்திய நாடுகள் சங்கமிக்கவேண்டும் என்கிறது அவுஸ்திரேலியா. **FIFA** இன் சக்தி நிறைந்த அரசியலில் ஓஷாணியாவின் பலமும் தகுதியும் உள்ள நாடுகள் தலைதூக்கவேண்டுமாயின், இதுவே ஒரேயொரு வழி என்கிறது அவுஸ்திரேலியா. கிரிக்கெட்டில் சக்கரவர்த்திகள். ஹொக்கிப் போட்டி, றகர் போட்டிகளில் மறுக்கமுடியாத பலமான சக்தி. ஆனால், உதைபந்தாட்டத்தில் ஆசியாவுடன் கைகோர்த்தாலென்ன என்ற பரிதாபநிலை அவுஸ்திரேலியாவுக்கு. ஆனால், அவுஸ்திரேலியா விளையாட்டுத்துறைகளில் சோடைபோகும் நாடல்ல. அவுஸ்திரேலியா உதைபந்தாட்டச் சாதனைகள் புரியமுடியாத நாடும் அல்ல.

இதேவேளை - ஐரோப்பாவிலிருந்து ஆபிரிக்கக் குரலொன்று உற்சாகம் நிறைந்து பலமாகக் கேட்கிறது. அது வேறுயாருடைய குரலும் அல்ல. லிபியத் தலைவர் கடாபியின் இளைய மகனான அல் - சாடி கடாபியின் குரலே அது. அவர் தனனை அரசியலிருந்து விலக்கிக்கொண்டு ஒரு உதைபந்தாட்ட வீரனாக, கழகங்களின் நிர்வாகியாக உதைபந்தாட்டம் பற்றிப் பேசுகிறார். அவர் கேட்டுக்கொள்வது இதுதான் - 2010 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டிகளை லிபிய நாட்டில் நடத்த முன்வரவேண்டும் என்பதாகும். அல்சாடி-லிபியத் தலைவரின் மகனாகப்பேசவில்லை என்பதற்கும், 2010 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிகளை லிபியாவில் நடத்தவேண்டும் என்று கேட்பதற்கும் நிறையத் தகுதியுடையவர். ஏனெனில், இவர் லிபிய தேசிய அணியின் ஒரு வீரர்.

லிபிய உதைபந்தாட்டச் சம்மேளனத்தில் உபதலைவர்-மேலும் ஐரோப்பிய ஜுவன்ராஸ் உதைப்பந்தாட்டக் கழகத்தின் பங்குதாரர்களுள் ஒருவர். அத்தோடு, இத்தாலியில் உள்ள தகுதிநிலை இரண்டில் அடக்கப்படும் டிரிஸ்ரீனா உதைப்பந்தாட்டக் கழகத்தின் உரிமையாளர். ஆகவே, ஒரு தகுதியானவரே இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றார். அதிலும் லிபிய நாடு - உலகின் ஏனைய நாடுகளுடன் தனது பொருளாதாரம்சார் உறவுகளை அகலத்திறந்து, உலகின் மிகப்பெரிய நிறுவனங்களைத் தன்நாட்டுக்கு அழைக்க விரும்புகின்றார். லிபியாவுடன் சர்வதேசம் சிறிது இறுக்கமான போக்கில் இருப்பதை உலகக்கிண்ணப் போட்டிகள் தளர்த்த உதவிசெய்யும் என்றும் நம்புகின்றார். எனவே, 2010 இல் லிபியாவுக்கு இச்சந்தர்ப்பத்தை வழங்கினால், 400 கோடி அமெரிக்க டொலர்களை அதற்காகச் செலவழிக்கத் தயாராக இருப்பதாகவும் அல்-சாடி கூறுகின்றார். உலகக்கிண்ணப் போட்டிகள் ஆபிரிக்கக் கண்டத்துக்கு வருமானால், அது மிகவும் மகிழ்ச்சிக்குரியதுதான்.



- நிர்மலன்



# திருகுடத் திருமஞ்சனப் பெருஞ்சாந்திப் பெருவிழா

## சிறப்பிதழ் - 08.07.2003

# திருக்கேதீஸ்வரம்



'பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல் உலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக் காதலித்துறை கோயில் வண்டு
பண்செய்யும் மாமலர்ப் பொலின் மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர்நாள் தொறும் துதிசெய அருள்செய் கேதீச்சரமதுதானே '

- எனப்பாடிய பெருமை சம்பந்தருக்குரியது.

'மாவின் கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்நகரில் பாவம் வினையறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல் தேவன் எனையாள்வான் திருக்கேதீச்சரத்தானே' என்று திருக்கேதீச்சரத்தைப் பாடிய பெருமை சுந்தரருக்குரியது.

இலங்கையில் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மிகவும் புராதனமான ஆலயங்கள் பல இருந்திருக்கின்றன என்பதற்குத் திருக்கேதீச்சரம் ஒரு அத்தாட்சியாகும்.

திருக்கேதீச்சரம் கோயில் கொண்டிருக்கும் மாதோட்டம்- ஒரு காலத்தில் பெருந்துறைமுகமாகவும், தமிழ் மன்னர் ஆட்சிக்குத் தலைநகராகவும் விளங்கியது. மணிவாசகப் பெருமான் குதிரை வாங்க வந்ததிருப்பெருந்துறை இது தானோ என்று ஆராய்கின்றவர்களும் உண்டு.

சைவப்பண்பும், தமிழ்ப்பண்பும் இவற்றின் தொன்மையும், சிறப்பும் ஒன்று சேர விளங்கும் இடம் திருக்கேதீச்சரமாகும். கேது தவம் செய்து தனது சாபத்தை போக்கிக் கொண்ட தலமாகையினால், கேதீச்சரம் என்னும் பெயர் உண்டாகியது. துவட்டா என்பவர் கேதீச்சரலிங்கத்தைப் பூசித்து, உத்தம தவத்தைச் செய்து விசுவகன்மாவெனும் புத்திரனைப் பெற்றமையால் இவ்விடம் மகாதுவட்டபுரம், மாதோட்டம் எனப்பெயர் பெற்றது.

சிவபக்தனான இராவணன் மனைவி மண்டோதரி பூசித்துப் பேரருளின்பம் பெற்ற தலம் திருக்கேதீச்சரம் தான் என்பதற்கு, மணிவாசகர் திருவாசகத்தில் சான்று கூறியுள்ளார். 'ஆர்கலி சூழ்தென்னிலங்கை அழகமர் மண்டோதரிக்குப் பேரருள் இன்பம் அளித்த பெருந்துறை மேய பிரானை' என்று, அவரது குயில்பத்துக் கூறுகின்றது.

திருக்கேதீச்சரம் திருஞானசம்பந்தராலும், சுந்தரமூர்த்தி நாயனாராலும் பாடப்பட்ட பெருமை வாய்ந்தது. திருக்கேதீச்சரம் என்னும் நாமம் திருநாவுக்கரசர் திருநாவால் உச்சரிக்கப்பட்டது. மந்திரசக்தி வாய்ந்தது. இவ்வாறு தனக்குத்தானே இணையாய தனிச்சிறப்பு வாய்ந்த புனிதத் தலம் திருக்கேதீச்சரம்.



தமிழகத்தின் தென்கரையிலே அமைந்து, மிளிர்ந்த 'இராமேஸ்வரத்திற்கு' ஈடுஇணையும் உள்ளதாய் ஈழத்திலே மன்னார்க் கரையிலே திருக்கேதீச்சரம் அமைந்து விளங்குகின்றதன்றோ! ஆனால், முதலில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த அந்நியர் படைகளால் பலமுறை திருக்கேதீச்சரம் அல்லலுக்குள்ளாகி சீரழிந்து சிறப்புக் குன்றிற்று.

சோழ மன்னர்கள் இலங்கையைப் பொலநறுவையில் இருந்து ஆட்சி செய்த காலத்தில் - மாதோட்டம், திருக்கேதீச்சரம் ஆகிய இரண்டினதும் அந்தஸ்து உச்ச நிலையை அடைந்தது. ஆனால், அர்சியலில் ஏற்பட்ட மாற்றம் அவற்றின் சிறப்பைத் திடீரெனச் சீரழியச் செய்தது.

திருக்கேதீச்சரம் சிறப்புடன் இருந்த காலத்தில் 'இராஜராஜேஸ்வரம்' என்ற பேரோடும் வழங்கப்படலாயிற்று. எத்தனை பேரழிவுகளைக் கண்டாலும், சிதைவுற்றாலும், மீண்டும் மீண்டும் புதுப்பொலிவுடன் திருக்கேதீச்சரம் மிளிர்கின்றது என்றால், அங்குள்ள இறைவன் - இறைவியின் தன்னிகரற்ற பேரருள் சக்தியே.

1976 ஆம் ஆண்டில், நடைபெற்ற மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழாவுக்குப் பின்னர் - 27 ஆண்டுகளின் பின் கௌரி அம்பாள் சமேத திருக்கேதீச்சரப் பெருமானுக்குக் குடநீராட்டு விழா, வெகுசிறப்பாக நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. இதேபோல் வடஈழத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கின்ற நகுலேஸ்வரப் பெருமானுக்கும் பல ஆண்டுகளுக்குப்பின் குடநீராட்டுப் பெருவிழா நடைபெறவிருக்கின்றது.

இவ்வாறாக, திருமூலரால் "சிவபூமி" எனப் போற்றப்பட்ட ஈழத்தில், பிரசித்திபெற்ற ஈஸ்வரங்கள் மீண்டும் புனரமைக்கப்பட்டு திருக்குடமுழுக்குப் பெருவிழா சிறப்பாக நடைபெற்று நாட்டுக்கும், மக்களுக்கும் சிறப்புக்கள் பெருக்க வேண்டும். எல்லாம் திருவருளின் பாற்பட்டதே!

ஈழத்திற்கு மணிமகுடம் சூட்டி மகிழ்வன எண்ணற்ற திருக்கோயில்கள். கோயிலில்லா ஊர் - நீரில்லாக் குளத்தையும், நிலவில்லா வானத்தையும் போன்றதாகும். ஊருக்குப் பெருமை கோயில். கோயிலுக்குப் பெருமை ஊர்நலம். இவ்வகையில் பாடல்பெற்ற திருத்தலமான பாலாவிக்கரையில் எழுந்தருளி, திருவருள் பெருமையோடு விளங்கும் திருக்கேதீஸ்வரப் பெருமானுக்குக் குடமுழுக்குவிழா நடைபெறுவதை எண்ணும்போது - எல்லா மக்களும் உவகை அடைகின்றார்கள். எல்லாம் வல்ல கேதீஸ்வர நாதனின் திருவருளால், நாட்டு மக்கள் அனைவரும் எல்லா நலனும் பெற்று வாழ்வாங்கு வாழ இப்புனித நாளிலே பிரார்த்திப்போமாக.

**மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்**

திருக்கேதீஸ்வரப் பெருமானின் திருக்குட
திருமஞ்சன பெருஞ்சாந்திப் பெருவிழா சிறப்புற
நிகழப் பிரார்த்திகின்றோம்.

சிறந்த முறையில் ஓவ்செற் அச்சுப்
பதிப்புகளை மேற்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய இடம்

**சுரபி பதிப்பகம்**

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

'மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்'
மக்களின் மனமறிந்த வங்கி

**மக்கள் வங்கி**

பிராந்திய முகாமையாளர்,
கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம். (சி.1163)

திருக்குடத் திருமஞ்சனப் பெருஞ்சாந்திப்
பெருவிழாவை சிறப்புற வாழ்த்துகிறோம்.

Original Japan T.V, டெக் மற்றும்
ஓடியோ செற்களைப் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்.

**Shan Multi Trade Centre**

150, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 0777 570259 (சி.1161)

திருக்கேதீஸ்வரப் பெருமானின் கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புற நடைபெறப் பிரார்த்திக்கிறோம்.
யாழ்ப்பாணம், சுன்னாகம் பழரசத் தொழிலகம்
(ஜசுபி) தயாரிப்புக்கள்

❖ நெல்லிரசம், மாம்பழஜாம், விளாம்பழ ஜாம், பழக்கலவை, மாம்பழக்கோடியல், பழக்கழி, தக்காளிசோஸ், மிளகாய் சோஸ், தேசி ஊறுகாய், மோர் மிளகாய்.

❖ சுவை மிகுந்த நவீன தயாரிப்புக்கள். இவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

**ஜசுபி உடுவில்** (சி.1167)

மாதோட்ட நன்நகரில் வீற்றிருந்து அருள் பாலிக்கும்
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

குறைந்த விலையில் நிறைந்த தரம்
ஆனையிறவு உப்பு உற்பத்தி
நிறுவனம்.
யாழ்.மாவட்ட விநியோகஸ்தர்.

**S.P.O என்ரபிறைசஸ்**

110, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
Tel / Fax - 201 - 2225220 (சி.1162)

நம் தேசத்தில் சாந்தி, சமாதானம் நிலவ
திருக்கேதீஸ்வரப் பெருமானை இந்நாளில்
வேண்டிநிற்கின்றோம்.

**சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

தலைவர், பொதுமுகாமையாளர்,
பணிப்பாளர், பணியாளர்கள்
சுன்னாகம். (சி.1165)

பாலாவிக் கரையில் வீற்றிருக்கும்
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**சீமாட்டி புடைவைக்கடல்**

122, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம். (சி.1164)
T.P 021 - 2222196

பெருமானின் நல்லருள் நாடெங்கும்
கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்.

**தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம்**

தலைவர், பொதுமுகாமையாளர்,
பணிப்பாளர், பணியாளர்கள்.
தெல்லிப்பளை.
(சி.1166)

நெஞ்சோடு பேசும் நிலா இசை

அங்கவீனமடைந்த மாணவர்களின் வளர்ச்சி நிதிக்காக ஒரே இரவில் இரு மாபெரும் இசை நிகழ்ச்சிகள்.

INKARAN MUSICAL GROUP

நம் தேசக் கலைஞர்கள் பங்குபற்றும்

ஐங்கரன் இசைக்குழு

மினி மகாலிங்கம் அவர்களின் நெறிப்படுத்தலில் நம் தேசக் கலைஞர்கள் வழங்கும் நவீன ஒலி, ஒளி தொழில்நுட்பத்துடனான இசை இரவு.

SITHARA MUSICAL GROUP

பிரபல முன்னணிக் கலைஞர்கள் ஒன்றிணைந்து வழங்கும்

சித்தாரா இசைக்குழு

நவீன மேடை அமைப்பு மற்றும் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய ஒளி அமைப்புக் காட்சிகளும், சிலிர்க்க வைக்கும் இசை அமைப் புடன் கூடிய பிரபல சித்தாரா இசைக் குழுவினரின் இசை இரவு.

இடம்: யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மைதானம்.
காலம்: 11.07.2003 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி

அனைவரும் திரண்டுவந்து அன்புடன் ஆதரவு தருவீர்!
யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி சமூகத்தினர்.

ஊடக அனுசரணை: நமது ஈழநாடு


# காவல்துறை உத்தரவை மதிக்காத வாகனச் சாரதிக்குத் தண்டத்தீர்ப்பு!

(கிளிநொச்சி)

வேகக்கட்டுப்பாட்டை மீறிச் சென்ற வாகனத்தைத் தமிழீழ காவற்துறையினர் நிறுத்துமாறு சைகை காட்டியபோதும், நிறுத்தாமல் சென்ற சாரதிக்குக் கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதிமன்றம் ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதித்துள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் அண்மையில் தமிழீழ காவல்துறையினரின் போக்குவரத்துப் பிரிவினர் வேகக்கட்டுப்பாட்டு நடவடிககையை மேற்பார்வை செய்துகொண்டிருக்கையில், வேகக்கட்டுப்பாட்டை மீறிச்சென்ற வாகனத்தை, நிறுத்துமாறு சைகைகாட்டியபோதும், சாரதி வாகனத்தை நிறுத்தாமல் ஓட்டிச் சென்றார்.

இதனால், போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் - குறிப்பிட்ட வாகனத்தைத் துரத்திச்சென்று, முறிகண்டிப்பகுதியில் வைத்து, வாகனத்தை மறித்து மேலதிக விசாரணைக்காகக் கிளிநொச்சியிலுள்ள போக்குவரத்துக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்திற்கு கொண்டு சென்றனர்.

பின்னர் குறிப்பிட்ட சாரதி, கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது, அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதனால் ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்தும்படியும், அவ்வாறு தண்டப்பணம் செலுத்தத்தவறின் 120 நாட்கள் கட்டாய சமூகசேவையில் ஈடுபடுமாறும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் த.செந்தூரன் உத்தரவிட்டார்.

# ஆட்பதிவுத் திணைக்களத்தினால் நடமாடும் சேவைகளுக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஆட்பதிவுத் திணைக்களத்தின் நடமாடும் சேவைகள், இம்மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதிவரை பிரதேச செயலகரீதியாக இடம்பெறவுள்ளதாக, யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் 14 ஆம் திகதி - கோப்பாய்,கரவெட்டி மற்றும் பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகங்களிலும், 15 ஆம் திகதி சாவகச்சேரி மற்றும் மருதங்கேணி பிரதேச செயலகங்களிலும், 16 ஆம் திகதி உடுவில், தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய பிரதேச செயலகங்களிலும், 17 ஆம் திகதி வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய பிரதேச செயலக மட்டத்திலும், 18 ஆம் திகதி நெடுந்தீவு, நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலக மட்டங்களிலும் இந்த நடமாடும் சேவைகள் இடம்பெறும்.

## கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்றைய ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய ஏற்பாட்டில் நடைபெறும் கே.சி.சி.சி.வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியில் இன்று-காலை 8.30 மணிக்கு, கிறாஸ் கொபர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார்ஸ விளையாட்டுக் கழகமும்,

பி.ப.1 மணிக்குச் சென்ரல் விளையாட்டுக் கழகத்தை எதிர்தது கே.சி.சி.சி விளையாட்டுக்கழக 'பி' அணியும் விளையாடவுள்ளன.


மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை!

மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை!

யாழ். நகரில் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றம், தலைநகரில் தனித்துவமான புத்தக நிலையமாகத் திகழும் ஜெயா புத்தக நிலையத்தின் (Jeya Book Centre) ஆதரவுடன் நடாத்தும் மாபெரும் புத்தகக் கண்காட்சியும், மலிவு விற்பனையும்.

*காலம்* : 2003 ஜூலை 15 முதல் 30 வரை.
*நேரம்* : தினமும் காலை 9.00 முதல் மாலை 6.00 மணிவரை (புதிய நேரம்).
*இடம* : யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூல்நிலைய மண்டபம்.

- பாலர் முதல் பல்கலைக்கழக மாணவர்களுக்கான பாட, பயிற்சிப் புத்தகங்கள்.
- பல்கலைக்கழக மாணவர்களுக்கான மருத்துவ, விஞ்ஞான, கணித, பொறியியல், கலை, விஞ்ஞான, வணிக நூல்கள்.
- கணினிக் கல்வி தொடர்பான நவீன நூல்கள்.
- சிறுவர் இலக்கியங்கள்.
- நாவல்கள், சிறுகதைகள், கவிதைத் தொகுதிகள்.
- அகராதிகள் (தமிழ், ஆங்கில மொழிகளில்).
- ஜோதிட நூல்கள்.
- சமையற்கலை நூல்கள்.
- ஆங்கில இலக்கிய நூல்கள்.
- தரமான அப்பியாசக் கொப்பிகள் (மலிவு விலையில்).
- தரமான C.R. புத்தகங்கள் (மலிவு விலையில்).

விரும்பிய யாவற்றையும் ஒரே இடத்தில், ஒரே நாளில் பெறக்கூடிய அரிய வாய்ப்பு! சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!!

நூல்களுக்கான விசேட கழிவுடன் கூடிய, விலை விபரம்:

| | |
|---|---|
| இலங்கை நூல்களுக்கு - | ஆகக்கூடிய சில்லறை விலையில் 10 % கழிவு |
| இந்திய வெளியீடுகளுக்கு - | 1 இந்திய ரூபாய் 2.75 வீதப்படி |
| இங்கிலாந்து வெளியீடுகளுக்கு - | 1UK £ - 165/= வீதப்படி |
| அமெரிக்க வெளியீடுகளுக்கு - | 1US $ - 110/= வீதப்படி |
| சிங்கப்பூர் வெளியீடுகளுக்கு - | 1S $ - 75/= வீதப்படி |

முக்கிய குறிப்பு:

பாடசாலைகள், பல்கலைக்கழகம், பொது நிறுவனங்கள், பிரதேசசபை நூலகங்கள், சனசமூக நிலையங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் என்பன புத்தகங்களைக் கொள்வனவு செய்யுமிடத்து குறித்த விலையில், 10% கழிவு கொடுக்கப்படும். புத்தக விற்பனையாளர்கள் மொத்தமாகக் கொள்வனவு செய்யுமிடத்து விசேட கழிவு வழங்கப்படும்.

நிறுவனங்களுக்கூடான புதிய ஓடர்களும் ஏற்கப்பட்டு விநியோகம் செய்யப்படும்.
யாழ்.எழுத்தாளர்கள் தங்களது படைப்புக்களை கண்காட்சியில் வைக்க விரும்பினால்
13,14 ஆம் திகதிகளில் கண்காட்சி மண்டபத்திற்கு நேரடியாக வருகை தரவும்.

வாருங்கள்! அலைகடலெனத் திகழும் புத்தக வகைகளைப் பாருங்கள்!
விரும்பியதை வாங்குங்கள்! அரியவாய்ப்பைத் தவறவிடாதீர்கள்!
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-1169)

வணிக மாணவர் மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்
JEYA BOOK CENTRE, 91-99, People's Park Complex, Colombo - 11

மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை!



## சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

நல்லநிலையில் 202 - 0801 இலக்கமுள்ள ஆட்டோவும், GJ 0381 இலக்கமுள்ள மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு.

கிருஷ்ணமூர்த்தி, 114/19, நாவலர் வீதி, (தேவி அச்சக ஒழுங்கை) யாழ்ப்பாணம். போன்: 2789. *(406)*

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த, லண்டனில் பணி புரியும் 1972 இல் பிறந்த விசாக நட்சத்திரமுள்ள லண்டன் பிரஜாவுரிமை உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

சாதகக்குறிப்பு, புகைப்படம் மற்றும் விபரங்களுடன் நேரில் அல்லது தபால் மூலம் தொடர்பு கொள்ளுங்கள். கிருஷ்ணமூர்த்தி, 114/19, நாவலர் வீதி, (தேவி அச் சக ஒழுங்கை) யாழ்ப்பாணம். போன்: 2789.

(407)

### சிறுகதை நூல்

"இந்து சமுத்திரத்தில் ஓர் இரதப் பயணம்"- எஸ்.பி.கிருஷ்ணன். சேலம் என்.ஆர்.அறக்கட்டளையின் இலக்கியப் பரிசு பெற்றது.

யாழ்ப்பாணம், சாவகச்சேரியிலும், எல்லாப்புத்தகக்கடைகளிலும் பெறலாம். விலை ரூ.110.00.

(408)

### தேவை

டீசல் வான் (VAN) தேவை, நாளாந்த குத்தகைக்கு விடவுள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

மில்க்வைற் சோப் தொழிலகம்
525/2, கே.கே.எஸ்.வீதி,
த.பெ.இல. 77,
(சி-1168) யாழ்ப்பாணம்.

நிறஞ்சனாஸ் சங்கானை

சத்தியராஜ், ரம்பா, மணிவண்ணன் கபாலி நடித்த
மிஸ்ரதி
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
தினசரி இரவு. 8.45 (பு.நே)
THE BOUN IDENTITY
(சி-1138)

ராஜா யாழ்ப்பாணம்.

7 ஆம் திகதி வரை
சரத்குமார், மீனா, ரம்யா கிருஷ்ணன் நடித்த
பாறை



தினசரி 10.30, 2.30, 6.30
சனி,ஞாயிறு இரவு 9.30
8 முதல் தூள்
(சி-1137)

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வான் என்று*
*அப்பால்நாற் கூற்றே மருந்து.*

திருக்குறள்.

# நமது நோக்கு

## பாதுகாப்பான மருந்தே அவசியம்!

சட்டவிரோதமாக மற்றும் அங்கீகரிக்கப்படாத மருந்துப் பொருட்களை விற்பனை செய்யும் மருந்தகங்கள் மீது, இறுக்கமான சட்டநடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரச மருந்தாக்கற கூட்டுத்தாபனம் ஏற்பாடுகளைச் செய்து வருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள மருந்தகங்களில் - சட்டரீதியாக அங்கீகரிக்கப்படாததும், இறக்குமதி அங்கீகாரம் பெறப்படாததும், காலங்கடந்ததுமான மருந்துப் பொருள்கள் விற்கப்படுவதாகப் பரவலாகப் புகார்கள் தெரிவிக்கப்பட்டு வந்தன.

இத்தகைய மருந்துப் பொருட்களால், பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். சிலர் உயிரிழப்பைக்கூட எதிர்கொண்டுள்ளனர். இன்னும் பலர் நிரந்தரமான உடல், உளப் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

பாவனைக்கு உதவாததும், பக்கவிளைவுகளை ஏற்படுத்துவதுமான மருந்துப் பொருள்கள் - சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டு, விற்கப்படுவதால் இத்தகைய பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

இதைவிட, காலங்கடந்த மருந்துப் பொருட்களும், இதேவகையான பாதிப்புக்களை ஏற்படுத்தி, நோயாளிகளன் உயிருக்குக்கூட ஆபத்துகளை ஏற்படுத்தி விடுகின்றன.

காலங்கடந்த மருந்துப் பொருள்களின் விற்பனை, யாழ்ப்பாணக் குடாநாட்டிலும்கூட இடம்பெறுவது ஒன்றும் புதிதான செய்தியல்ல. மருந்தகங்களில், காலங்கடந்த மருந்துப்பொருட்களை சுகாதாரப் பரிசோதகர்கள் கைப்பற்ற - மருந்தகங்களைச் 'சீல்' வைக்க நடவடிக்கை எடுத்ததாகவும், குற்றப்பணம் அறவிட்டதாகவும் அண்மையில் கூடச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இறுக்கமான சட்டக்கட்டுப்பாடுகள் இல்லாதமையால், இத்தகைய மருந்தகங்கள் சில ஆயிரம் ரூபாக்களைத் தண்டப்பணமாகச் செலுத்திவிட்டு, மருந்தகங்களை மீளத் திறந்து வியாபாரத்தை நடத்தக்கூடிய நிலைதான் காணப்பட்டுவந்தது.

இத்தகைய குற்றங்களுக்கு, ஐயாயிரம் ரூபா தண்டப் பணமே இதுவரை அறவிடப்பட்டு வந்தது. இந்தத் தண்டப் பணத்தை, ஐம்பதாயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது.

சட்டரீதியாகத் தண்டப்பணம் அறவிடப்படுவது - இத்தகைய குற்றச்செயல்களைக் குறைக்க உதவலாம். ஆனால், இத்தகைய குற்றங்கள், சமூகத்தையே நோயாளியாக்கும் வகையைச் சார்ந்தது என்பதால் - இவற்றை முற்றாகத் தடுக்கக் கூடியவகையிலான சட்ட ஏற்பாடுகள் உருவாக்கப்படுவது அவசியமாகின்றது.

இதுபோன்றே, மருந்தகங்கள் - மருத்துவரின் சிபார்சின்றி தன்னிச்சையாக மருந்துப் பொருட்களை விற்பனை செய்தல், அங்கீகரிக்கப்பட்ட மருந்தாளர் இல்லாமல் மருந்தகங்கள் செயற்படுதல் போன்றவையும்கூட நோயாளர்களுக்குப் பெரும் ஆபத்தானதாக முடிவடையலாம்.

அங்கீகரிக்கப்பட்ட மருந்தாளர் இல்லாமலே பெரும்பாலான மருந்தகங்கள் இப்போதும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றினால் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவுகள் குறித்து நீண்டகாலமாகப் பல்வேறு தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டு வந்தபோதும் -

இதை நடைமுறைப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இப்போது இத்தகைய செயற்பாடுகளைத் தடுக்க, புதிய சட்டம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு, அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் நடவடிக்கைகளை எடுத்துவருவதாகவும் கூறப்படுகின்றது.

தனியே மருந்துப் பொருட்களுக்கு மட்டும், இத்தகைய சட்டக் கட்டுப்பாடுகள் இருந்தால் போதாது. மருத்துவப் பணியில் கூட அங்கீகாரம் பெறாத பலர் ஈடுபட்டு வருகின்றனர்.

போலி மருத்துவர்கள் - நாடு முழுவதிலும் உலாவருவது புதிதான விடயமல்ல. ஆங்கில மருத்துவம் கற்காத - நாட்டு வைத்தியர்கள் கூட, இன்று ஆங்கில மருந்துகளைச் சிபார்சு செய்கின்ற அளவுக்கு மருத்துவநிலை இங்கு தரம்தாழ்ந்து போயிருக்கிறது.

இந்த நிலை தொடர அனுமதிக்கப்படுவது - சமூகத்தை நோயாளியாக்கவே வழிவகுக்கும். இதற்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளில் இறங்குவது அவசியம்.

சட்டரீதியான பாதுகாப்புக் கிடைக்கும்போது - இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக அதிகாரிகள் தமது அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

அதேவேளை, வடக்கு - கிழக்குப் பகுதிகளில், அரச மருத்துவமனைகளில் பொதுமக்களுக்குத் தேவையான வைத்திய வசதிகளைப் பெறமுடியாதிருப்பதற்கும் அரசாங்கமே பொறுப்பேற்கவேண்டும்.

போதிய மருத்துவர்களை வைத்தியசாலைகளில் நியமிக்காதுள்ளதால், மக்கள் - அரச மருத்துவமனைகளுக்குச் செல்வதைத் தவிர்த்து - தாமே, ஏதோ அறிந்த மருந்துப் பொருட்களை வாங்கி உட்கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

இவையெல்லாம், மருந்துப் பொருட்கள் சம்பந்தமாக இறுக்கமற்ற கட்டுப்பாடுகள் மற்றும் அசமந்தப்போக்கினால் தான் வேகம் பெற்றன. இனிவரும் காலத்திலாவது இது குறித்துக் கவனம் செலுத்தப்பட்டால் - இத்தகைய ஆபத்தான சூழ்நிலையில் இருந்து சமூகத்தை மீட்கலாம்.

---

### விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடன் ஆராய

# திருகோணமலை, வன்னிப்பகுதிகளுக்கு கண்காணிப்புக்குழுத் தலைவர் செல்வார்

(கிளிநொச்சி)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ரெலவ்சன் திருகோணமலைக்கும் வன்னிக்கும் விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுவதற்கே திருமலைக்கும், வன்னிக்கும் செல்லவுள்ளதாகத் தெரியவருகிறது.

நாளை திருகோணமலைக்குச் செல்லும் ரெலவ்சன் - இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கிண்ணியாவிலுள்ள விடுதலைப்புலிகளின் முகாமை அப்புறப்படுத்துவது தொடர்பாக, புலிகளின் பிரமுகர்களுடன் கலந்துரையாடவுள்ளார்.

இதனையடுத்து செவ்வாய்கிழமை இவர், வன்னி செல்லவுள்ளார். அங்கு சில தினங்கள் தங்கியிருக்கும் அவர் - கடற்பிராந்தியப் பாதுகாப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் ஆராய்வார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், கடற்பிராஈந்தியத்தில் கடற்படையினரும், விடுதலைப் புலிகளும் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பாகப் புதிய யோசனைகளையும், விடுதலைப் புலிகளிடம் ரெலவ்சன் முன்வைப்பார் எனவும் போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் அக்னஸ் பிறகடோட்ரயர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த விடயங்கள் தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி ஆகியோருடன் ரெலவ்சன் கடந்த வெள்ளிக்கிழமை கலந்துரையாடியதாகவும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

### வடக்கு-கிழக்குப் பகுதி

## பாடசாலை நூலக அபிவிருத்திக்கு பதினேழு மில்லியன் ரூபா ஒதுக்கீடு

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நூலக அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகக் கல்வியமைச்சின் நூலக அபிவிருத்திப்பிரிவு, 17 மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்நிதியிலிருந்து வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 568 பாடசாலைகளில் நூலக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக மாகாண நூலக இணைப்பாளர் என்.ஆனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

இதன்படி வட-கிழக்கில், 77 புதிய நூலகக் கட்டடங்களும், 206 புனரமைப்புச் செய்யப்பட்ட கட்டடங்களுமாக - 283 பாடசாலைகளில் நூலகக் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிகளின் உதவித்திட்டத்தின் கீழ், பாடசாலை நூலகத்துக்குத் தேவையான புத்தகங்களும், 42 பாடசாலைகளுக்குக் கணனிகளும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன், மேலும் 300 பாடசாலைகளுக்கு விரைவில் புத்தகங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை நூலகங்களுக்குப் பொறுப்பாக 315 ஆசிரிய நூலகர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இவர்களுக்கு ஐந்து நாட்கள் வதிவிடப் பயிற்சி வழங்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

## மஹாபொல நிதியத்துக்கு 170 கோடியை விடுவிக்குக!

### அமைச்சர் ரவி கருணாநாயக்க கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி நிதியத்திலிருந்து மஹாபொல நிதியத்திற்குக் கிடைக்கவுள்ள நிலுவைப்பணமான 170 கோடி ரூபாவை ஜனாதிபதி நிதியம் வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என, அமைச்சர் ரவி கருணாநாயக்க கோரியுள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபையினூடாக ஜனாதிபதி நிதியத்திற்குக் கிடைக்கும் நிதியில் - 50 வீதத்தை அடுத்த வருடம் ஜனவரி மாதம்முதல் வழங்கவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தபோதிலும், 1997 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வந்துள்ள நிலுவைப்பணம் - 170 கோடி ரூபாவை வழங்குவது தொடர்பாக உறுதிமொழிகள் எதுவும் வழங்கப்படவில்லை.

மஹாபொல புலமைப்பரிசில் பெறும் மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு, இது விடயத்தில் ஜனாதிபதி நம்பிக்கை நிதியம் - தமது கவனத்தைச் செலுத்த வேண்டும் எனவும் அமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் கேட்டுக்கொண்டுள்ளார்.

### பூநகரி, கரைச்சி, கண்டாவளைப் பகுதிகளில்

# காலம்கடந்த பிறப்பு, இறப்புக்களை பதிவுசெய்ய இடம்பெயர் சேவைகள்!

(ஆழியவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் காலம் கடந்த பிறப்பு, இறப்புக்களைப் பதிவுசெய்யும் இடம்பெயர்சேவை எதிர்வரும் செவ்வாய், புதன்கிழமைகளில் பூநகரி, கரைச்சி, கண்டாவளை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நடைபெறவுள்ளது.

இந்த இடம்பெயர்சேவையில் வடக்கு - கிழக்கு மாகாண உதவிப்பதிவாளர்நாயகம் கலந்து கொள்ளவுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

இதுவரையும் பிறப்பு, இறப்புக்களைப் பதிவு செய்யாதவர்கள், உரிய ஆவணங்களை அந்தந்த கிராம அலுவலர்களின் சிபார்சுடன், உதவி அரசாங்க அதிபரின் அறிக்கை, தடுப்பு மருந்து அட்டை, சாதகக்குறிப்பு, சகோதரர்களது பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், பாடசாலை அதிபரின் அறிக்கை, பெற்றோரின் திருமணச்சான்றிதழ் என்பவற்றுடன் குறிப்பிட்ட தினங்களில் அந்தந்த உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்குச் சமுகமளிக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

இந்த இறுதிச்சந்தர்ப்பத்தைத் தவறவிடாது சகலருக்கும் இதனை அறிவிக்குமாறு கிராம அலுவலர்கள் பணிக்கப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட மேலதிகப் பதிவாளர் தெரிவித்துள்ளார்

(122)

## ஐந்து பாடசாலை மாணவிகளை வல்லுறவுக்குட்படுத்திய ஆசிரியர்!

### மாத்தறையில் சம்பவம்

(கொழும்பு)

மாத்தறையில் பிரபலமான பெண்கள் பாடசாலையொன்றில் ஐந்து மாணவிகளைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய ஆசிரியர் ஒருவரைப் பொலிஸார் தேடிவருகின்றனர். பாதிக்கப்பட்ட மாணவிகள் ஐவரும் மாத்தறை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

விளையாட்டுப் போட்டி ஒன்றுக்கு மாணவிகளைக் கூட்டிச் சென்ற ஆசிரியர், உல்லாசப் பிரயாண ஹோட்டல் ஒன்றுக்கு அவர்களை அழைத்துச்சென்றே பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாகப் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள் ளது.

மாணவிகளைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய ஆசிரியர் தலைமறைவாகியிருப்பதாகவும், இவரைத் தேடிப் பொலிஸார் தீவிர தேடுதல்களை மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

## சமாதானத்தையும், அபிவிருத்தியையும் அரசாங்கம் ஒருபோதும் நிறுத்தாது!

### அமைச்சர் திலக் மாரப்பன

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திட்டத்தை, எந்தவொரு காரணம் கொண்டும் அரசாங்கம் இடைநிறுத்தாது என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டியவில் நடைபெற்ற, ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே, அமைச்சர் திலக் மாரப்பன இவ்வாறு கூறினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாடு முன்னோக்கிச் செல்வதாகவும், நாட்டுக்குச் சர்வதேச சமூகம் உதவிகளையும், நிதிகளையும் வழங்கியது வரப்பிரசாதமாக இருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# மீண்டும் கிளிநொச்சி நகரில் மாவட்ட மருத்துவமனை!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை மீண்டும் - கிளிநொச்சி நகரத்தில் எதிர்வரும் புதன்கிழமை முதல் இயங்கவுள்ளது.

கிளிநொச்சி நகரம் - படையினரால் சத்ஜய இராணுவ நடவடிக்கை மூலம் ஆக்கிரமிக்கப்பட்டபோது, மாவட்ட மருத்துவமனை, இடம்பெயர்ந்து அக்கராயன் சுற்றயல் கூறு மருத்துவமனையுடன் இணைந்து இயங்கிவருகிறது.

படையினரால் அழிக்கப்பட்ட பழையகட்டடம் இருந்த இடத்தில் புதிதாகக் கட்டடம் அமைக்கப்பட்டு, இந்த மருத்துவமனை இயங்கவுள்ளது. தற்போது மருத்துவமனையின் கட்டம் 1 வெளிநோயாளர் பிரிவாகக் கிளிநொச்சி -உதிரவேங்கையடியில் இயங்குகின்றது. மகப்பேற்றுமனையும் இங்குசெயற்படுகின்றது.

இந்த இடத்தில் பொதுமருத்துவமனையை - ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியுடன் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டபோதிலும், நிர்மாணப்பணிகள் தொடரப்படாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் தீர்வே அவசியம்!

சமாதானப் பேச்சு வார்த்தைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டநிலையில், அதனை மீண்டும் ஆரம்பிப்பதற்கான பல முயற்சிகள், பல தரப்பாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று செய்திகளும், ஊகங்களும் நாள்தோறும் வெளிவந்த வண்ணம் உள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் கோரியுள்ள முறையான - உருப்படியான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்குரிய வரைபினை, இன்னும் அரசு உத்தியோகபூர்வமாகச் சமர்ப்பிக்கவில்லை. முன்னர் திரைப்படங்கள் திரையிடப்படுவதற்கு முன்னர், 'வெகுவிரைவில் வெளிவிடப்படவுள்ளது' - என்று ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் போன்று, 'இடைக்கால நிர்வாகம்' குறித்த அறிக்கைகள்தான், தினமும் வெளியிடப்பட்டு வருகின்றன.

இந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்துக்கூட, ஒரு முறையான வரைபினை, ரணில் விக்கிரமசிங்கவின் 'அரசு கொடுக்க முடியாத இந்த நிலையில், சமாதானத் தீர்வுக்குரிய 'வழிகாட்டி வரைபடம்' ஒன்றை (Road Map For Peace) ரணில் விக்கிரமசிங்க தயாரித்து வழங்க இருப்பதாகவும், செய்திகள் கூறுகின்றன. கடந்த சில வாரங்களாக, இந்த வழி காட்டி வரைபடம் குறித்த செய்திகளுக்கு - அரச ஊடகங்களும், சில வெளிநாட்டு ஊடகங்களும் முக்கியத்துவம் கொடுத்து வருவதையும் நாம் காண்கின்றோம்!

இந்த 'வழிகாட்டி வரைபடம்' என்ற சொற்றொடர், உலக அரசியலில் புதிதான ஒன்றல்ல. இஸ்ரேலிய - பலஸ்தீனப் பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறிக்கொண்டு, அதில் மும்முரமாக ஈடுபட்டுள்ள, அமெரிக்கா பெற்றெடுத்த அல்லது தத்தெடுத்த சொற்றொடர்தான் இந்த வழிகாட்டி வரைபடம் (Road Map), அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இந்த வழிகாட்டி வரைபடத்தினை அமுலாக்குவதற்காக, எத்தனை காரணங்களைக் கூறினாலும், அவர் அடுத்த ஆண்டு சந்திக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் தான் முக்கியமான அடிப்படைக் காரணமாக உள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில், ஜோர்ஜ் புஷ் - புளோரிடா மாகாணத்தில் பெற்ற யூதர்களின் வாக்குகளை, மீண்டும் தக்கவைக்கும் விதத்திலேயே செயற்பட்டு வருவதையும் இங்கே சுட்டிக்காட்டுவது பொருத்தம். அதற்கிணங்க, இஸ்ரேல்- பலஸ்தீன சமாதான முயற்சிகளுக்கு, ஓர் அரைவேக்காடான கால எல்லை நிர்ணயிக்கப்பட்டு, அதைத் திணிக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அமெரிக்காவின் இந்த வழிகாட்டி வரைபடம் வெற்றிபெறாமல் தவிப்பது மட்டுமல்லாது,



நிலைமையை மோசமாக்கி வருகின்றது என்றும் சொல்லலாம். தவிரவும், யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பலஸ்தீனத் தீவிரவாதக் குழுக்களுக்கும் இதில் பங்கேதுமில்லை.

இப்போது, அண்மைக் காலமாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - அமெரிக்காவின் இதே சொற்றொடரைப் பற்றிப்பிடித்துக்கொண்டு, பேசி வருவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. ரணில் விக்கிரமசிங்கவின் அமெரிக்க விஜயமும், அமைச்சர் மிலிந்த மொறகொடவின் அமெரிக்கத் தொடர்புகளும், இந்த 'வழிகாட்டி வரைபட' யோசனைக்கு அடித்தளமாக அமைந்துள்ளதில் வியப்பில்லை.

தவிரவும், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள்சபையின் பொதுக்கூட்டத்தில் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேசவுள்ளார். இலங்கைத்தீவின் சமாதான முயற்சிகள் குறித்து முக்கியமாக அவர் பேசுவார் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ள இந்த வேளையில், இந்த 'வழிகாட்டி வரைபடச் சமாதானம்' (Road Map) - நிச்சயம் ரணிலுக்கும், ஜோர்ஜ் புஷ்ஷிற்கும் அரசியல் ஆதாயங்களைத் தரும் என்பதில் சந்தேகமில்லை.

ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்குரிய வரைபினையே, தரமுடியாமல் திண்டாடுகின்ற ரணில் விக்கிரமசிங்க, ஓர் இனத்தின் தேசியப் பிரச்சினைக்குரிய தீர்வினைத் தரக்கூடிய திட்டம் ஒன்றை - கால அட்டவணையுடன், அரசியல் திட்டங்களுடன் தரமுடியுமா? என்பது சந்தேகமே. அதனை அவரும்கூட நம்பமாட்டார் என்றுதான் எண்ணமுடிகின்றது.

இவை, தமிழீழ மக்களின் பிரசசினைகளைத் திசைதிருப்பும் முயற்சிகளே தவிர, வேறில்லை. தவிரவும், 'சர்வாதிகாரத்திற்கு எதிரான போர்' என்றும், 'சமாதானத்திற்கான போர்' என்றும் எத்தனையோ சொற்றொடர்களை, வரலாறும் பார்த்துக்கொண்டுதான் உள்ளது.

தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய அடிப்படைத் திட்டங்கள் குறித்து, ஆராயவேண்டுமானால், அவை குறித்து ஏற்கனவே பலதடவைகள் - தமிழீழத் தேசியத் தலைவர் விளக்கமாகத் தெரிவித்து வந்துள்ளார். 'தமிழ்மக்கள் ஒரு தேசிய இனம, அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற மண் - அவர்களுடைய தாயக நிலமாகும். தாயக நிலத்தில் வாழுகின்ற தேசிய இனமாகிய அவர்களுக்கென்று தனித்துவமான மொழி, கலை, பண்பாடு ஆகியவை உள்ளன. ஆகவே அவர்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டு. இது அவர்களுடைய அடிப்படை உரிமையுமாகும். தமிழ் மக்கள் தமது அரசியல் தகைமையை, தமது சமூக பொருளாதார வாழ்வை, அவர்களே நிர்ணயித்துக்கொள்ள விரும்புகின்றார்கள். தம்முடைய மண்ணில் தம்மைத் தாமே ஆளுகின்ற உரிமையை அவர்கள் கோரிநிற்கின்றார்கள்'. இவ்வாறு பலமுறை தேசியத் தலைவர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் நடத்திய சர்வதேச ஊடகவியலாளர் மாநாட்டிலும், அவரது மாவீரர்தினப் பேருரைகளின் போதும், இவை மீண்டும் மீண்டும் கூறப்பட்டுள்ளன.

ஆகவே, அரசிற்கோ - அல்லது அமெரிக்கா போன்ற உலக நாடுகளுக்கோ ஒரு Road Map தேவையென்றால், இதோ - தேசியத் தலைவர் கூறிய இந்த அடிப்படைத் திட்டங்களுக்குரிய பாதையைப் போடுவதற்குரிய முயற்சிகளில் இறங்கட்டும். இறங்கி, அதற்கு Road Map என்று பெயர் வைத்து அழைக்கட்டும்.

ஆனால், முதலில் தமிழீழ மக்களின் வாழ்வை இயல்புநிலைக்குக் கொண்டு வந்து, அவர்களுடைய நாளாந்த வாழ்வின் அடிப்படையான - அவசியமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை, அரசு இதய சுத்தியுடன் செய்வதற்கு முன்வரவேண்டும்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் மூலம், இநதப் பிரச்சினைகள் தீர்க்கப்படுமாதலால், முதலில் முறையான இடைக்கால நிர்வாகம் செயல்படுவதற்குரிய செயற்பாடுகளை அரசு தொடங்கவேண்டும்.

தமிழீழ மக்கள் ஒரு தலைமையின் கீழ் ஒருமித்து நின்று, தங்கள் விடுதலைக்கான விடிவெள்ளியை எதிர்பார்த்து நிற்கின்ற இவ் வேளையில், சிங்களத்தின் தலைமையோ இரண்டாகப் பிரிந்து நிற்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி சந்திரிகா - சிங்கள, பௌத்தப் பேரினவாத நலனிற்காக - வெளிப்படையாகவே செயல்பட்டு வருவதோடு, தமிழ்மக்கள் மீது ஒரு போரை வலிந்து ஆரம்பிப்பதற்குரிய முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றார். ரணில் விக்கிரமசிங்கவின் அரசைக் கலைப்பதற்குரிய காரணங்களை, அவர் மெதுவாகப் பட்டியல் போட்டு வருவதை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

தனது நாட்டின் 'பொருளாதாரச் சீர்குலைவு, பணவீக்கம், மனித உரிமை மீறல், சட்ட - ஒழுங்கு மீறல், நாட்டின் இறையாண்மைக்குச் சவால், போர் ஆரம்பமாகப் போகின்றது' - என்பது போன்ற காரணங்களைச் சுட்டிக்காட்டி, சந்திரிகா அம்மையார் - ரணிலின் அரசைக் கலைத்தால், அதனை எந்த வெளிநாடுகளும் கேள்வி கேட்கமுடியாது.

ஏனென்றால், தனது நாட்டின் நலனிற்காக, நாட்டு சட்ட திட்டங்களுக்கு அமைய, தகுந்த காரணங்களுடன், தான் இந்த நடவடிக்கையைச் செய்ததாக அவர் கூறுமிடத்து, அதனை எதிர்ப்பது உலக நாடுகளுக்கு முறையானதல்ல. அத்துடன், 'தான் அரசைக் கலைத்தாலும், சாமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்துவேன்' என்று, அவர் அறிவிக்கும் பட்சத்தில், ஜனாதிபதி மீது வெளிப்படையான குற்றச்சாட்டுக்களை எவரும் முன்வைக்கமுடியாது. அதனைத்தான் அவர், இப்போது செய்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால், இங்கே ஒரு விடயம் திசைதிருப்பப்பட்டு வருவதை சுட்டிக்காட்டுதல் பொருத்தமானது. சிங்கள தேசத்தின் தலைமை இரண்டாகப் பிரிந்து நிற்பதனால், இயல்பாகவே அதில் ஒரு பகுதிக்கு நல்ல பெயர் கிடைத்து வருவதை நாம் காண்கின்றோம். சிங்கள-பௌத்த பேரினவாத நலனை வெளிப்படையாகப் பறைசாற்றி, சந்திரிகா செயல்பட்டு வருவதனால், அவருக்கு ஒரு கூடாதபெயர் ஏற்பட்டு வருவது உண்மைதான். அதே வேளை, சமாதானத்திற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றவர் என்றரீதியில், ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஒரு நல்ல பெயர் கிடைத்து வருவதையும் நாம் காண்கின்றோம். உண்மையில் அவர் அதற்கு முழுமை யாகத் தகுதிபடைத்தவர் தானா?

'தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினையை, வெறும் பொருளாதாரப் பிரச்சினையாக மட்டும் கருதி, அதனூடே சமாதானப் பேச்சுவார்த்தைகளை ரணில் நடத்த முற்படுகின்றார்' என்றும், தமிழ்மக்களின் நலனைவிட, சிங்கள தேசத்தின் பொருளாதார மேம்பாடுதான் அவருக்கு முக்கியமாக இருக்கின்றது' - என்பதும் குறிப்பிடத்தக்கது. ரணில் விக்கிரமசிங்கவின் சிங்கள மேலாண்மைக் கருத்துக்களையும், கொள்கைகளையும் அவரது கடந்தகால அரசியல் வரலாறு இன்னும் காட்டியே நிற்கின்றது. அவருடைய நிகழ்கால அரசியல் நடவடிக்கைகளும் அதற்கு வலுவூட்டுவதாகவே அமைந்து வருகின்றன.

இன்று இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பினையே தரமுடியாதவராக இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க, 'இனப்பிரச்சினையையே தீர்த்து விடலாம்' என்கிற தோற்றத்தை உண்டு பண்ணுகின்ற நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதையும் கவனத்தில்கொள்ள வேண்டும். தவிரவும், இலங்கை என்ற தீவிலுள்ள இரண்டு தேசிய இனங்களுள் ஏற்பட்ட முரண்பாட்டை, வெளிநாடுகளைத் தலையிடவைத்து, ஒருபக்க சார்பான தீர்வினை வலிந்து திணிக்கும் சாமர்த்தியமான முயற்சிகளில், ரணில் விக்கிரமசிங்க இறங்கியிருப்பதைச் சற்றுக் கூர்ந்து கவனித்தால் புரியும்.

'ரோக்கியோ நிதி வழங்கும் மாநாடு நடைபெறுவதற்கு முன்னர், தமிழீழ விடுதலைப் புலிகளைக் கலந்தாலோசிக்காமல் சில தீர்மானங்கள் உருவாக்கப்பட்டதாகவும், புலிகள் ரோக்கியோ மகாநாட்டிற்கு வரும்போது, புலிகளை வற்புறுத்தி, அந்தத் தீர்மானங்களுக்கு அவர்களை இணங்கச்செய்யும் முயற்சி எடுக்கப்பட இருந்ததாகவும்' விடுதலைப்புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளார்கள்.

'தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இறுக்கமான நிபந்தனைகளைத் திணிக்கும் நோக்கத்தோடு, அரசுக்குச் சார்பாக இத்தீர்மானங்கள் உருவாக்கப்பட்டிருந்தன' - என்றும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவமும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, கைச்சாத்திடப்பட்ட பல விடயங்கள் இன்னமும் அமுலாக்கப்படாததால், இன்னமும் தமிழ்மக்களின் வாழ்க்கை, இயல்பு நிலைக்குத் திரும்பாத அவல வாழ்க்கையாகவே உள்ளது. தமிழ்மக்களின் அடிப்படைத் தேவைகளும், அவசரத் தேவைகளும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இராணுவக் கெடுபிடிகள் அதிகரித்து வருவதோடு, பல புதிய இராணுவ முகாம்களை அமைக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. போர்நிறுத்த மீறல்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட 'இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான'- எந்தவிதமான உருப்படியான முயற்சிகளும் முறையாக எடுக்கப்படவில்லை.

இவ்வளவு பிரச்சினைகளும் உள்ளூரில் தீர்க்கப்படாமல் இருக்கும்போது, ரோக்கியோவின் உதவிவழங்கும் மாநாட்டைப் பயன்படுத்தி, சர்வதேச நாடுகளின் உதவியுடன், விடுதலைப் புலிகளை ஓர் அரசியல் பொறிக்குள் தள்ள முயன்ற ரணில் விக்கிரமசிங்கவின் குள்ளநரிப்புத்தியை வேறு என்னவென்றுதான் சொல்வது?

சிங்கள - பௌத்த பேரினவாத நலன் குறித்து, ஜனாதிபதி சந்திரிகா வெளிப்படையாகப் பேசிவருகின்றார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ, திரைமறைவில் அதற்காக வேலை செய்து வருகின்றார். ஜனாதிபதி சந்திரிகாவின் அட்டகாசமான அதிகாரப் பேச்சுக்கள், ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிகளுக்கு உள்ளூரத் துணைபோவதோடு மட்டுமல்லாமல், உலக அரங்கில் அவருக்கு நல்ல பெயரையும் ஏற்படுத்திக்கொடுத்து வருகின்றன.



தமிழீழ மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முனையாதவர்கள், தமிழீழ மக்களின் இடைக்கால நிர்வாகத்தினை முறையாக வழங்க முன்வராதவர்கள், தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினையைத் தீர்த்து, அவர்களுடைய உரிமையைத்தர மறுக்கின்றவர்களான இந்தச் சிங்கள - பௌத்த பேரினவாதிகள்- வெளிநாட்டு சக்திகளுக்கு தமிழ், சிங்கள தேசங்களை தாரைவார்க்கத் தயாராக இருக்கிறார்கள்.

சிங்கள தேசமும், வெளிநாட்டு வல்லரசுகளும் ஓர் அடிப்படை உண்மையைப் புரிந்துகொள்ளவேண்டும். தமிழ்மக்களின் அரசியல் தலைவிதியைத் தமிழ்மக்களேதான் நிர்ணயிக்கவேண்டும். அதற்குரிய பேச்சுகளில் சுதந்திரமாகப் பங்குபற்றும்நிலை உருவாக வேண்டும். தமிழ்மக்களின் எதிர்பார்ப்பு வேட்கை எதுவோ, அதுவேதான் சமாதானத் தீர்வு ஊடாக நிறைவேற்றப்படவேண்டும். அதனை விடுத்து, தமிழ்மக்கள் சம்பந்தப்படாத - அவர்கள் ஏற்காத திட்டத்தை, அவர்கள்மீது திணிகக முயல்வது பாரதூரமான விளைவுகளைக் கொண்டுவரும். இப்படிப்பட்ட முடிவு ஒன்றை முன்னர் இந்தியா எடுத்த காரணத்தினால் இன்று இந்தியாவும் இப்பிரச்சினையில் பின்னரங்கிற்குத் தள்ளப்பட்டுவிட்டது.

இந்த அரசியல் காலகட்டத்தில் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் பிரம்மாண்டமாக நடைபெற்ற 'பொங்கு தமிழ்' நிகழ்வு, மிகப் பொருத்தமான ஒன்றேயாகும். தமிழ்மக்கள் தங்கள் அரசியல் வேட்கைகளை, வெளி உலகிற்கு மிகத்திடமாக அறிவித்து நிற்கின்றார்கள். எந்தச் சக்தியும் அவர்களது உரிமைகளில் தலையிடக்கூடாது என்பதனைத் தமிழ் மக்கள் பொங்கு தமிழ் நிகழ்வினூடாகத் தெரிவித்து நிற்கின்றார்கள். அவர்களது பிரகடனத்தைச் அரசோ - உலக நாடுகளோ எளிதில் அலட்சியம் செய்திட இயலாது.

ஆகவே - அமெரிக்கா, பிரிட்டன் போன்ற உலகநாடுகள் - தங்கள் நேரத்தையும், செல்வாக்கையும் அரசிடம் பிரயோகிக்க வேண்டும். சிங்கள தேசத்தின் இரண்டு தலைமைகளையும் ஒருமுகப்படுத்தி - சமாதானப் பேச்சுகள் மூலமாக ஒரு நீதியான, நிரந்தரமான, கௌரவமான தீர்வினை அடைவதற்கு இந்த உலக நாடுகள் மனப்பூர்வமாகவே உதவி செய்திட வேண்டும்.

இரணடு தரப்புக்களுக்கும் பொதுவாக நடந்து கொள்ளக் கூடியவர்கள் நாங்கள் என்ற நம்பிக்கையை, இந்த உலகநாடுகள் ஏற்படுத்த வேண்டும். அதறகுரிய முதல் நடவடிக்கையாக விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்த நாடுகள் நீக்கவேண்டும். இந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும், எதிர்காலத்திற்குரிய அரசியல் கட்டமைப்பிலும் - விடுதலைப்புலிகளும், அரசும் சமபங்காளிகள் என்று இந்த உலகநாடுகள் கூறிவருவது உண்மையென்றால், அதனைச் செயலில் நிரூபித்துக் காட்டுவது மிகவும் அவசியம். ☆

**சபேசன்**

# பள்ளிவாசல் மீதான தாக்குதலில்; பாகிஸ்தானில் 53 பேர் பலியாகினர்!



பாகிஸ்தானின் தென்மேற்கு நகரான குவேட்டாவிலுள்ள, ஷியா பள்ளிவாசல் ஒன்றில் நடைபெற்ற தாக்குதலில் 53 பேர் பலியாகினர்.

வெள்ளியன்று தொழுகை நடந்துகொண்டிருந்தபோது, மூன்று துப்பாக்கிதாரிகள் இப்பள்ளிவாசலில் நுழைந்து, துப்பாக்கிச் சூடு மற்றும் கைக்குண்டுத் தாக்குதலை நடத்தினர். பள்ளிவாசலினுள் சில குண்டுகளும்வெடிக்க வைக்கப்பட்டன. இத்தாக்குதலைத் தொடர்ந்து ஷியா - சுனி முஸ்லிம் பிரிவினரிடையே முறுகல் நிலை தோன்றியுள்ளது. இப்பகுதியில் முன்னேற்பாடாக பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு எந்தக்குழுவும் உரிமை கோரவில்லை. எனினும், சுனி முஸ்லிம்களே தாக்குதலை நடத்தியதாக ஷியா முஸ்லிம்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.



இறந்தவர்களின் இறுதிச்சடங்குகள் நேற்று நடைபெற்றபோது, நிலைமை பதற்றமாகக் காணப்பட்டது.

இத்தாக்குதலின் பின்னணியில் வெளிநாட்டு சக்தியொன்று இருப்பதாக ஜனாதிபதி முஷாரப் குற்றஞ்சாட்டியுள்ளார். தனது அமெரிக்க, ஐரோப்பிய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ள முஷாரப்- தாக்குதல் நடத்துவதற்கு காரணமாக இருந்தவர்களைக் கண்டுபிடித்து விரைவில் நீதியின்முன் நிறுத்துவோம் எனவும் சூளுரைத்துள்ளார்.

## படங்கள் நீக்கம்

பேரழிவு ஆயுதங்களை ஈராக் மறைத்துவைத்திருப்பதாக, தமது வெப்தளத்தில் படங்களை வெளியிட்டிருந்த அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ., தற்போது அவற்றை நீக்கிவிட்டது.

ஈராக் விஞ்ஞானி ஒருவர், அணுகுண்டு தயாரிக்கப் பயன்படுத்தும் யுரேனிய செறிவூட்டக்கூடிய கருவிகளை தனது தோட்டத்தில் மறைத்து வைத்திருப்பதாகக் காட்டும் படங்களை, அந்த வெப்தளம் கொண்டிருந்தது.

இனியும் இத்தகைய படங்களை வெப்தளத்தில் வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லையென, சி.ஐ.ஏ. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உலகவலம்



கடந்த 4 ஆம் திகதி அமெரிக்க சுதந்திர தினத்தை முன்னிட்டு பிரபல ஹொலிவூட் நடிகர் ஆனோல்ட் சுவட்ஸர்னேகர் ஈராக்கிற்கு விஜயம் செய்து, அங்குள்ள அமெரிக்கப் படையினருடன் எடுத்துக் கொண்ட படம்.

# 11 துருக்கிய விசேட படையினர் அமெரிக்கப் படையால் கைது!

வட ஈராக்கில் கைதான தனது 11 படையினரையும் விடுதலை செய்யுமாறு, துருக்கி - அமெரிக்காவைக் கோரியுள்ளது. இது ஒரு வெட்கப்படவேண்டிய, கேவலமான நடவடிக்கை என, துருக்கிப் பிரதமர் எட்டோகன் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக துருக்கி வெளியுறவு அமைச்சர், அமெரிக்க வெளியுறவு அமைச்சருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

துருக்கிய விசேட படையினர் - கடந்த வெள்ளியன்று, சுலைமான்யா நகரில் தங்கியிருந்தபோது, சுமார் 100 அமெரிக்கப் படையினர் திடீரென நகரினுள் புகுந்து அதிரடி நடவடிக்கையாக - 11 துருக்கியப் படையினரையும், ஆறு பொதுமக்களையும் கைது செய்தனர். இவர்கள் தற்போது வட ஈராக் நகரான கிர்குக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து, நேற்று துருக்கிக்கும் ஈராக்கிற்கும் இடையிலான விநியோகப் பாதையின் எல்லைக் கதவைத் துருக்கி மூடியுள்ளது. இச்சம்பவம் தொடர்பாகக் கருத்துக்கூற அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் மறுத்துள்ளனர்.



# லைபீரியா போரில் தலையிடுமாறு அமெரிக்காவிடம் மீள வலியுறுத்து!

மேற்கு அமெரிக்க பிராந்திய அமைப்பான ECOWAS, லைபீரியாவுக்கு மூவாயிரம் அமைதிப்படையினரை அனுப்ப இணக்கம் தெரிவித்துள்ளது. இந்த அமைதிப்படையினருக்கு அமெரிக்கா தலைமை தாங்க வேண்டுமெனவும் இப்பிராந்திய அமைப்பு கேட்டுள்ளது.

லைபீரியாவில் கடும் போர் நடைபெற்று வருவதால், அமைதிப்படையை அனுப்புமாறு முன்னதாக அமெரிக்காவிடம் கோரிக்கை விடப்பட்டிருந்தது. எனினும், ஜனாதிபதி புஷ் இது தொடர்பாக இன்னும் முடிவு எதையும் எடுக்கவில்லை. எனினும், லைபீரிய நிலைமையை அறிய அமெரிக்கக்குழுவொன்று அங்கு சென்றுள்ளது.

அரச படைகளுக்கும் - கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடைபெறும் கடும் மோதலையடுத்து, இலட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்வதால், பெரும் மனித அவலம் ஏற்படலாம் என, உதவி அமைப்புக்கள் எச்சரித்துள்ளன.

ஒரு வாரகால போர்நிறுத்தம், கடந்த வெள்ளியன்று நாட்டின் வடக்கில் கிளர்ச்சியாளர்கள் ஆரம்பித்த தாக்குதலுடன் முறிவடைந்துள்ளது. இதனிடையே லைபீரியாவுக்கு சர்வ



தேச அமைதிப்படை வந்த பின்பே தான் பதவியை விட்டு விலகுவேன் என லைபீரிய ஜனாதிபதி சார்ள்ஸ் டெயிலர் தெரிவித்துள்ளார்.

லைபீரியாவில் அமைதி ஏற்பட, அமெரிக்கா தலைமையிலான அமைதிப்படையே தேவையென கிளர்ச்சியாளர்களும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



பக்தாத்தில் உள்ள அமெரிக்கத் தளம் ஒன்றில் கைதுசெய்யப்பட்ட ஈராக்கியர்கள் அமெரிக்கப் படையினரால் பலவந்தமாக தடுத்துவைத்திருக்கும் காட்சி.

ஊரடங்கு நேரத்தில் நடமாடியது, சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுகளின் பேரில் கைதான, ஈராக்கியர்களே இவ்வாறு இங்கு தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றனர்.

# ஈராக் பொலிஸார் மீது குண்டுத் தாக்குதல்!

மேற்கு ஈராக்கில் பொலிஸ் நிலையமொன்றினருகே இடம்பெற்ற குண்டுவெடிப்பில், குறைந்தது ஏழு பேர் பலியாகினர். இறந்தவர்கள் அனைவரும் அமெரிக்கப் படையினருடன் இணைந்து செயற்படும், ஈராக்கியப் பொலிஸார் எனக் கூறப்படுகிறது.

பொலிஸ் நிலையம் முன்பாக இரத்த வெள்ளம் காணப்படுவதை, அல்-ஜெசிரா தொலைக்காட்சி ஒளிபரப்பியது. இச்சம்பவத்தில், மேலும் 50 பேர் காயமடைந்தனர். சம்பவம் நடைபெற்ற பகுதி அமெரிக்கப் படைகளால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில், அமெரிக்கப் படையினரும் காயமடைந்தனரா என்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. பயிற்சிக்காக தாம் அணிநடையாகச் சென்றபோது, வீதியின் அருகில் இருந்த குண்டு ஒன்று திடீரென வெடித்ததாக, காயமடைந்த பொலிஸார் ஒருவர் தெரிவித்தார். அமெரிக்கப் படைகளுடன் சேர்ந்து செயற்பட்டதாலேயே இந்தத் தாக்குதல் தம்மீது நடத்தப்பட்டதாகவும், இது குறித்து ஏற்கனவே இனந்தெரியாதோரால் எச்சரிக்கப்பட்டிருந்ததாகவும், காயமடைந்த மற்றுமோர் ஈராக்கியப் பொலிஸார் தெரிவித்தார்.

இப்பகுதியில் முன்னரும் பல தடவைகள் அமெரிக்கப் படைகள் மீது தாக்குதல்கள் நடந்துள்ளன. சதாமிற்கு ஆதரவானவர்களை அதிகமாகக் கொண்ட பிரதேசமாக இது விளங்குகிறது.

# மொஸ்கோ இசை நிகழ்ச்சியில் தொடராக குண்டு வெடிப்புகள்!

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவின் வடமேல் பகுதியில் உள்ள நஷினோ விமானத்தளத்தில், நேற்று நிகழ்ந்த தொடரான குண்டுவெடிப்புக்களினால், 20 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். தற்கொலைத் தாக்குதலாளர்கள் இருவரே, இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாகவும், இவர்கள் செச்னியப் போராளிகள் எனவும் ரஷ்யப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை தொடராக மூன்று குண்டு வெடிப்புக்கள் இப்பகுதியில் கேட்டுள்ளன. திருவிழா ஒன்று இப்பகுதியில் நடைபெறுவதாகவும், இப்பகுதியில் நின்ற காவலர்கள் - இரு பெண்களை நிறுத்தி சோதனை செய்ய முற்பட்டபோது, இவர்கள் தமது உடலில் இருந்த குண்டை வெடிக்கவைத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் இரண்டு குண்டுவெடிப்புக்கள் அருகிலுள்ள சந்தையொன்றினுள் நடந்தது.

கோடைக்கால இசை நிகழ்வு ஒன்றிலேயே இத்தாக்குதல்கள் நடந்துள்ளன. எனினும், இத்தாக்குதலுக்கு இதுவரை எவரும் உரிமை கோரவில்லை.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சட்ட திட்டங்களுக்கு எதிராக கண்காணிப்புக்குழு நடக்கிறது!

## சி. ஐ. டியினர் குற்றச்சாட்டு

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, இந்த நாட்டுச் சட்டதிட்டங்களுக்கு எதிராகச் செயற்படுகின்றது என்று, குற்றப்புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெஹிவளை குற்றப்புலனாய்வுப் பொலிஸ் பொறுப்பதிகாரி சுனில் தாப்ருவின் கொலை சம்பந்தமாக, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மதன்குமாரிடமிருந்து வாக்குமூலங்களைப் பெற்ற பொலிஸாரிடம், சில தகவல்களைப் பெறவேண்டுமென்று- போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு வேண்டுகோள் விடுத்ததை அடுத்தே, குற்றப் புலனாய்வுப் பொலிஸார் மேற்கண்டவாறு தெரிவிததுள்ளனர்.

இந்த வேண்டுகோளை - போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹெராக்லண்ட் விடுத்திருந்தார்.

ஹெராக்லண்ட்டின் இந்த வேண்டுகோள்- நீதி, தண்டனைச் சட்டத்தின் 220 ஆவது விதிகளுக்கு முரணானது என்றும், குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நாட்டுச் சட்ட திட்டங்களின் படி, சந்தேக நபர்களை விசாரணை செய்வது, பொலிஸாருக்கும் நீதிமன்றத்துக்கும் உரித்தானது என்றும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு - பொலிஸ், நீதிமன்றங்களின் கடமைகளுக்குப் புறம்பாக, தெஹிவளை கொலைச் சம்பவத்தை விசாரணை செய்வதனால், குற்றப் புலனாய்வுப் பொலிஸாரினால பெற்றுக் கொளளப்பட்டிருக்கும் சந்தேகநபரின் வாக்குமூலங்களுக்குப் பாதிப்பாக அமையும் என்றும், பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டால், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு, இரண்டு வருடச் சிறைத்தண்டனை வழங்குவதற்கு நீதிமன்றத்துக்கு அதிகாரமுள்ளது.

தெஹிவளை கொலைச் சம்பவத்தில் விடுதலைப் புலிகளுக்குச் சம்பந்தமில்லை என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஏற்கனவே தெரிவித்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், சந்தேகநபரான மதன்குமாரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிசை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



மானிப்பாய் செல்லமுத்து மைதானத்துக்கு கரும்புலிகள் கப்டன் மில்லர், கப்டன் அங்கயற்கண்ணி ஆகியோரின் உருவப்படங்களைத் தாங்கிய ஊர்தி பவனியாக வருவதைப் படத்தில் காணலாம்.

## நோர்வே...

அன்ரன் பாலசிங்கத்துக்கு விளக்குவதற்காக லண்டன் செல்வார் எனவும், திட்டவரைபு திருப்தியளிக்காவிட்டால் - தமிழ்ச்செல்வன் லண்டனுக்குச் செல்லமாட்டார் எனவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைசசின் அதிகாரங்கள், வன்னிப் புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரங்கள் மற்றும் சில அதிகாரங்கள் இடைக்கால நிர்வாக அலகின் கீழ் கொண்டு வரப்படலாம் என, கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

## இரு பொலிஸாரும்...

மாவட்ட புலிகளின் தளபதி ராபர்ட் ஆகியோர், இந்த இரு பொலிஸாரையும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லசந்த டி சில்வாவிடம் ஒப்படைத்தனர்.

விடுதலைப் புலிகளின் புதூர் அரசியற்துறைப் பொறுப்பாளர் சத்தியராஜ், பொலிஸாரின் பிடியிலிருந்து நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த இரு பொலிஸாரும் புலிகளால் நேற்று மாலை 5.45 மணியளவில் விடுதலை செய்யப்பட்டனர். (லி)

# உணர்வெழுச்சியுடன் நடந்த கரும்புலிகள் ....

காலை 9 மணிக்கு - மில்லரின் நினைவாலயத்தில் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது. தேசியக் கொடியினை விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் லோறன்ஸ் ஏற்றிவைக்க, பொதுச் சுடரினை, கடற்புலிகளின் வடமராட்சிக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கல்யாணி ஏற்றிவைத்தார். நினைவுரையை - பரப்புரைப் போராளி அமிர்தாப் நிகழ்த்தினார்.

மாலை 6.30 மணிக்கு கரும்புலிகளின் பொதுப்படம் நெல்லியடிச் சந்தியிலிருந்து ஊர்வலமாக, மில்லர் நினைவாலயத்திற்கு எடுத்துவரப்பட்டது.

ஈகச்சுடரினை கரும்புலி மேஜர் பாரதி, கரும்புலி கப்டன் சத்தியா ஆகியோரின் பெற்றோர்கள் ஏற்றிவைத்தனர். மில்லரின் உருவச் சிலைக்கு கரும்புலி வீரர் ஒருவரது தாயாரும், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் மலர்மாலை அணிவித்தனர்.

கரும்புலி கப்டன் அன்புமலரின் தாயார் பொதுப்படத்திற்கான மாலையை அணிவித்தார்.

கரும்புலி கப்டன் மில்லரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுக் கல்லினை, வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.தயா திரைநீக்கம் செய்துவைத்தார். தொடர்ந்து பொதுமக்களும், மாணவர்களும், போராளிகளும் மலர் அஞ்சலி செலுத்தினர்.

அரங்க நிகழ்வுகள் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில், வடமராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றன.

கரும்புலிகள் ஆறாவது ஒலிப் பதவி நாடாவைக் கடற்புலிகளின் வடமராட்சி கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கல்யாணி வெளியிட்டு வைத்தார். வெளியீட்டுரையை பண்டிதர் பரந்தாமன் நிகழ்த்தினார்.

விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் அமிர்தாப், யாழ்.மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் சி. இளம்பரிதி ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர்.

கரும்புலிகள் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் போன்றவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

வலிகாமம் கோட்டத்தில் கரும்புலிகள் தின நிகழ்வுகள், மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு, நேற்று மாலை 5 மணியளவில் கரும்புலி கப்டன் மில்லர், கரும புலி கப்டன் அங்கையற்கண்ணி ஆகியோரின் உருவப்படங்களைத் தாங்கிய விசேட ஊர்தி, மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன்- மானிப்பாய் இந்துக்கல்லூரியிலிருந்து ஆரம்பமாகி மைதானத்தை வந்தடைந்தது.

முதற் கரும்புலி கப்டன் மில்லர் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட நேரமான மாலை 7.05 மணிக்கு, ஈகச் சுடர் ஏற்றும் நிகழ்வு இடம்பெற்றது. ஈகச் சுடரினை கரும்புலி மேஜர் சிற்றம்பலத்தின் சகோதரி நந்தினி ஏற்றிவைத்தார். பொதுச்சுடரினை வலிகாமம் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்மறவன் ஏற்றிவைத்தார்.

பின்னர், வலிகாமம் மேற்கு கடற்தொழில் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத் தலைவர் க.குலசிங்கம் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில், போராளி மருத்துவர் தூயவன் எழுதிய 'இன்னொரு போர் முகம்' என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது. நூலின் வெளியீட்டு உரையினை, கலாநிதி சூசை ஆனந்தன் நிகழ்த்தினார்.

பின்னர், கரும்புலி மேஜர் சிற்றம்பலத்தின் சகோதரி நந்தினி 'இன்னொரு போர் முகம்' நூலின் கௌரவப் பிரதியை வெளியிட்டுவைக்க, அதனை எழுத்தாளர் சாந்தன் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து, சிறப்புப் பிரதியை கு.யோகநாதன், விக்கி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் - நினைவுரையை யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சொலமன் சிறில், ஜப்பான் பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரையினை - யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி நிகழ்த்தினார். பின்னர் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் பெருமளவிலான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

யாழ். நல்லூர் கோட்ட கரும்புலிகள் நாள் நிகழ்வுகள், நேற்றுமாலை நாச்சிமார் கோவில் வீதியில் எழுச்சி பூர்வமாக நடைபெற்றன.

பாடசாலை மாணவிகளின் பாண்ட் இசை வாத்தியத்துடன் முதற கரும்புலி மில்லரின் திருவுருவப்படம் எடுத்துவரப்பட்டு, அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

தொடர்ந்து, உயர்தொழில்நுட்ப நிறுவக மாணவர் ஒன்றியத்தலைவர் எஸ்.ஜெகதீசன் தலைமையில் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில், முதன் நிகழ்வாக, ஈகச்சுடரை நல்லூர் கோட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூமகள் ஏற்றிவைக்க, தேசியக் கொடியினை யாழ்.மாவட்ட அரசியற்துறையைச் சேர்ந்த அமுதன் ஏற்றிவைத்தார்.

கரும்புலி மில்லரின் திருவுருவப் படத்திற்கு ஈகச்சுடரினை, கடற்கரும்புலி சுதாகரின் தந்தையார் இராசநாயகமும், மலர்மாலையை மாவீரர் கப்டன் அருளின் தாயார் அம்பிகையும் அணிவித்தனர்.

தொடர்ந்து பொதுமக்கள், போராளிகள் அகவணக்கம் செலுத்தியதுடன் கரும்புலிகளின் உருவப்படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வும் இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கில் நடைபெற்ற கரும்புலிகள் நாள் நிகழ்வுகளின் போது, பொதுச்சுடரினை, கடற்புலிகளின் தளபதி லெப்.கேணல் மங்களேஸ் ஏற்றிவைத்தார். தேசியக்கொடியினை தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து, ஈகச்சுடரினை- கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூரணி ஏற்றிவைத்தார். தொடர்ந்து நினைவுரைகளும், கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

கரும்புலிகள் தின நிகழ்வுகள் நேற்று வவுனியா, திருகோணமலை மட்டக்களப்பு மாவட்டங்களிலும் உணர்வுபூர்வமாக பொதுமக்களாலும் போராளிகளாலும் அனுஷ்டிக்கப்பட்டன. (91,200,122,116)

## இடைக்கால....

யுத்தத்தை ஆரம்பிக்குமாறு கோரினால், அதை என்னால் ஏற்றுக் கொள்ளமுடியாது என்றும், யுத்தம் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையாது என்றும் சுட்டிக்காட்டினார்.

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்படுகின்ற முறுகல்நிலைகளை, உடனடியாகத் தீர்த்து வைப்பதில், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, முக்கிய பங்காற்றி வருவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

மீண்டும் யுத்தம் ஏற்படமாட்டாது என்று கூறிய பிரதமர், தற்போது நடைமுறையில் இருக்கும் புரிந்துணர்வு உடன்பாடு, சமாதான உடன்பாடாக மாற்றப்பட வேண்டும். இதறகாக அரசு தொடர்ந்து முயற்சியில் ஈடுபடும் என்றும் தெரிவித்தார். (01)

உங்கள் நிறைவு.... எங்கள் சேவை....
மோட்டார் சைக்கிள்களைச்
சிறப்பாகச் சேவிஸ் செய்து
கொள்ள நாடுங்கள்
இரத்தினம் ஊர்தி சேவைத்தளம்
32 சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.
வணிக விடுமுறை நாள்கள் தவிர்ந்த
எல்லா நாள்களிலும் (ஞாயிறு உட்பட)
சேவிஸ் செய்து கொள்ளலாம்.

அழகிய கூந்தலின் ரகசியம்




(சி-1142)

பக்க விளைவு அற்றது

பயோட்டின் H உடன்
இயற்கையான வீட்டமின் E
சேர்க்கப்பட்டு தற்போது
பயோட்டினெக்ஸ் E
என்ற பெயரில் அறிமுகமாகிறது.

பயோட்டினெக்ஸ் -E

எது உங்கள் பிரச்சினை
- தலைமயிர் உதிர்கிறதா
- தலைமயிர் வளர்ச்சியின்மையா
- தலைமயிர் நுனி வெடிப்பா
- வலுவிழந்த தலைமயிரா
- வறண்ட சருமமா
- தோலில் சுருக்கம் விழுந்து வயதான தோற்றமா
- சரும நோய்களா
- உடைந்த ஒழுங்கற்ற நகங்களா

?



பயோட்டினுடன்
வீட்டமின் - E யும்
சேர்ந்துள்ளதால்
சிறந்த பயன்
கிடைக்கும்

இவ்வனைத்துப் பிரச்சினைகளுக்கும் உடன் நிவாரணி விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தப்பட்ட

பாவனை முறை
தினம் 2 கப்சியூல்ஸ்
3 மாத காலத்திற்கு
பாவிக்கவும்.

BIOTINEX -E

இயற்கையான பயோட்டினெக்ஸ் -E
தெற்காசிய மக்களுக்கென
பிரத்தியேகமாகத்
தயாரிக்கப்பட்டது சிறப்பம்சமாகும்.

மற்றும் நாடளாவிய ரீதியில் அனைத்து முன்னணி
பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். முகவர்:
ஜெகன் பார்மசி
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021-2223191

வன்னி முகவர்:
அகிலன்ஸ் பார்மசி
பிள்ளையார் மருந்தகம்,
கிளிநொச்சி.

Marketed By:
Arkem Colombo
Tel: 470290, 075-344436, E.mail - arkem@sltnet.lk

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.